பக்கங்கள்: 16 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 29 ஞாயிற்றுக்கிழமை 11.04.2021 கதிர் 157

**இனி இது ரகசியம் அல்ல!**

யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர் ஒருவர் நேற்று மாலை தொலைபேசி அழைப்பு எடுத்தார். ஆள்களைப் பார்த்து நக்கல், நளினம் பண்ணுவதில் படுசூரர் அவர். கிண்டல் பேச்சும் தாராளம். எடுத்த எடுப்பிலேயே பழமொழியைப் புது மொழியாக

பக்கம்02 »

# யாழ்.மக்களுக்கான எனது பயணத்தை எவராலும் தடுத்து நிறுத்தவே முடியாது!

## மேயர் மணிவண்ணன் திட்டவட்டம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

பாதை எப்படியானது என்பதைத் தெரிந்து கொண்டுதான் எனது பயணத்தை ஆரம்பித்தேன். யாழ். மாநகர மக்களுக்கான எனது பயணத்தை எந்தவொரு சூழ்நிலையிலும் நிறுத்தமாட்டேன்.

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மீள உருவாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் நான் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலையாகியுள்ளேன். எனது விடுதலைக்கு ஆதரவு தெரிவித்தவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

யாழ். மாநகரில் தூய்மையைப் பேணும் நன்நோக்கில் முன்னெடுக்கப்பட்ட

☞2

# யாழ்.மேயருக்கு பிணை வழங்கியது அரசாங்கமா? அல்லது நீதிமன்றமா?

## நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பி. கேள்வி ஜனாதிபதி, டக்ளஸ் பதிலளிக்க வேண்டுமாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம். ஏப்ரல் 11

யாழ்.மேயர் மணிவண்ணனுக்கு பிணை வழங்கியது அரசாங்கமா? அல்லது நீதிமன்றமா?

– நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இக்கேள்விக்கு ஜனாதிபதியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

☞2

## யாழில் இயங்கும் திரையரங்குகள் யாவும் மறு அறிவித்தல் வரை பூட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அனைத்து திரையரங்குகளும் இன்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன. வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன்

☞2

## யாழ்ப்பாணத்தில் மேலும் 17 பேருக்குக் கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 17 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞2

## மாகாண சபைத் தேர்தலில் தொகுதிக்கு 3 வேட்பாளர்கள்

### ஆளும்தரப்பு பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பு

மாகாண சபைத் தேர்தலில் கட்சியொன்றின் 3 வேட்பாளர்களைத் தொகுதிக்கு முன்னிறுத்தும் யோசனையை நிராகரிப்பதற்கு ஆளும் கட்சியின் சில பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விவகாரம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்

☞2

## பங்காளிகளின் தனிவழி சந்திப்பால் கடும் சீற்றத்தில் 'மொட்டு' அணியினர்




பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகள் மீண்டுமொருமுறை தனிச்சந்திப்பொன்றை நடத்தியுள்ளமை குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் கடும் சீற்றத்தில் உள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில்

☞15




## ஊடகவியலாளர் மீது பொலிஸ் தாக்குதல்!

### சுதந்திர ஊடக இயக்கம் கடும் கண்டனம்

சுயாதீன ஊடகவியலாளரும் புகைப்படக் கலைஞருமான மலிக அபேகோன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தாக்கப்பட்டமை பொலிஸாரின் மனித நேயமற்ற செயல் என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

☞2




## இலங்கைக்குள் இன்னொரு நாடு

### அஞ்சுகின்றது தேசிய பிக்குகள் முன்னணி

நாட்டுக்குள் பிறிதொரு நாட்டை உருவாக்கும் வகையில் கொழும்புத் துறைமுக நகரப்பொருளாதார ஆணைக்குழு உருவாக்கத்துக்கான சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசு ஆட்சிக் காலத்தை நிறைவு செய்யும்போது நாட்டு மக்களின் எதிர்காலம் எவ்வாறானதாக அமையும் என்ற பாரிய அச்சம் ஏற்பட்டுள்ளது.

– இவ்வாறு தேசிய பிக்கு முன்னணியின் செயலாளர் வகமுல்லே உதித்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும்

☞2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாக்கியானம் பண்ணினார்.

*"சோழியன் குடுமி சும்மாவும் ஆடும். தேவைப்பட்டால் சும்மா ஆடாமலும் இருக்கும்...!"* – என்றார்.

*"என்ன விசயம்? யாரை நோண்டுகின்றீர்கள்?"* – என்றேன்.

*"உங்கள் நண்பரைப் பற்றிய விவகாரம்"* என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார்.

*"மேயர் மணிவண்ணன் கைது எண்டதும் நேற்று (வெள்ளி) பின்னேரப் பேப்பரை அதைக் கண்டிச்ச அரசியல் தலைவர்களின்ரை அறிக்கைகளை வைச்சே நிரப்பிப் போட்டியள்."* – என்றார்.

நான் தொலைபேசியில் உம்' கொட்டினேன்.

*"அந்த அறிக்கைகளிலை notable absentee இருந்ததைக் கவனிச்சீங்களோ...?"* – என்று கேட்டார்.

நான் 'அலேர்ட்' ஆனேன். என்னை ஏதோ சிக்கலில் மாட்ட வழி பண்ணுகின்றார் என்று தோன்றியது.

*"ஏன் நாங்கள் சம்பந்தரின்ரை கருத்தைக் கூடக் கேட்க முயற்சித்தனாங்கள் தானே... அது குறித்து இன்றும் (நேற்றும்) என்பத்தியில் குறிப்பிட்டிருந்தேனே...!"* – என்று நான் சமாளிக்க முயன்றேன்.

*"இல்லை, இல்லை.. நான் உங்களில் பிழை கண்டு பிடிக்கவில்லை...!"* – என்றவாறு அவர் தொடர்ந்தார்.

*"வழக்கமாக இப்படியான விடயம் எண்டால் விழுந்தடிச்சு, முந்திக் கொண்டு அறிக்கை தாறவர் தமிழரசுத் தலைவர் மாவை. அதுவும் எம்.பி. பதவி பறிபோன பிறகு இது விடயத்திலை அவர் கனகச்சிதம். ஆனால் மேயர் மணிவண்ணன் விடயத்திலை மட்டும் அவர் மௌனம். அவரைச் சூழ நிற்கிற சரா வரை களத்திலை இறங்கி அறிக்கை விட்டிட்டினம். உவர் மட்டும் தான் மிச்சம். அதுதான் உங்களிட்டைக் கேட்கலாம் எண்டு நினைச்சன். நீங்களும் – உங்கள் பேப்பரும் – அவரிட்டை கேட்கவில்லை. அவரும் கருத்து வெளியிடவில்லை. ஏன் அறிக்கை விட்டு – அதைக் கண்டிச்சு – தானும் களத்திலை இருக்கின்றதைக் காட்ட சந்தர்ப்பம் கிடைச்சும் பம்மிக் கொண்டிருந்தவராம்?"* – என்று கணை தொடுத்தார் அவர்.

*"அதுவும் இண்டைக்கு மணிவண்ணனுக்கு முதல் அரசியல் எதிரிகள் கஜன் மார். இருவரும் மணி கைதைக் கண்டிச்சு அறிக்கை விட்டவையள். கஜேந்திர குமார் நாடாளுமன்றத்தில் சீற்றத்துடன் பேசியுமிருக்கிறார். உங்கடை பேப்பரிலைதான் போட்டிருந்தது. ஆனால் மாவை மட்டும் மௌனம் ஏன்? வழக்கமாக சோழியன் குடுமி சும்மா ஆடும். இப்ப தேவைப்பட்டால் சும்மா ஆடாமலும் இருக்கும் போல"* – என்றார் அவர்.

*"இல்லை.. மேயர் மணிக்காக சுமந்திரன்தான் அதிகம் ஊடாடி அலைஞ்சவர். மேயர் மணிவண்ணனை சுமந்திரனின்ரை ஆள் எண்டு நினைச்சு ஒதுங்கியிருப்பார். அதுதான் நடந்திருக்கும்.!"* – என்று எனக்குத் தோன்றிய விடயத்தை – மனதில் பட்டதை – நான் கூறினேன்.

*"நீங்களும் உங்கள் பத்திரிகைத்துறை மூலமான அரசியல் ஞானமும்...!"* – என்று கிண்டல் பண்ணினார் அவர்.

பின்னர் அவரே விளக்கமான பதிலும் தந்தார்.

*"இப்படிக் கைது விவகாரம் எண்டு மணிக்குச் செல்வாக்குக் கூடினால் எங்கே மணி பெரியாளாகித் தமக்குப் போட்டியாக – தமது முதலமைச்சர் கனவுக்குச் சமதையாகப் போட்டியிடுபவராக – மேலெழுந்து விடுவாரோ என்ற அச்சம்தான் காரணம். அத்தகைய மணிக்குச் செல்வாக்கு வரக் கூடியதாக அறிக்கை விட்டுத் தமக்குப் போட்டியாக – செல்வாக்கு மிக்கவராக – ஏன் வளர்த்து விட வேண்டும், அதற்குத் தாம் ஏன் துணை போக வேண்டும் என்று கருதித்தான் பம்மிக் கொண்டார் நம் தமிழரசுத் தலைவர்."* – என்று விளங்கப்படுத்தினார் அவர்.

உண்மையாகவும் இருக்கும். தமக்குப் பக்கத்தில் இருப்பவர் தம்மை விஞ்சி வளர்ந்து, பெரியாளாகி, செல்வாக்குப் பெற்றுத் தம்மை மிஞ்சி விடுவார் என்ற அச்சம் மாவையின் இரத்தத்தில் ஓடுவது எனக்கு நன்கு தெரியும்.

அதுதான் சோழியன் குடுமி சும்மா ஆடாமல் இருந்தமைக்கும் காரணமாக இருக்கக் கூடும்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல்–

## பங்காளிகளின்...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த வியாழக்கிழமை இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, அமைச்சர் உதய கம்மன்பில தலைமையிலான புதிய ஹெல உறுமய, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சி, முன் னாள் அமைச்சர் டியூ குணசேகர தலை மையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உட்பட 11 கட்சிகளின் தலைவர்கள் இந் தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான புதிய சட்டம், மே தினம் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரான அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

அதேவேளை, அரசிலிருந்து விலகி தனிவழி செல்வதற்கான நகர்வா இதுவென எழுப்பப்பட்ட கேள்விக்கு, இல்லை என அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா பதிலளித்தார்.

மே தினம் தனித்தா அனுஷ்டிக்கப்படும் என்ற கேள்விக்கு, கூட்டாகவும், தனித்தும் அனுஷ்டிப்பதற்கான உரிமை உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.மேயருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலையே இவ்வாறு அவர் கேள்வி எழுப்பி உள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

யாழ் மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், நேற்று (வெள்ளிக்கிழமை) இரவு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னதாகவே அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, மணிவண்ணனுக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளிப்பதாகத் தன்னிடம் கூறினார் என ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன், மணிவண்ணன் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னராகவே –

(i) மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்படுவார் என்றும் –

(ii) அவர் மீது பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படமாட்டாது என்றும் –

(iii) சாதாரண சட்டத்தின் கீழேயே வழக்கு தொடரப்படும் என்றும் – அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்று இந்த நாட்டில் நீதிமன்றங்களும், பொலிஸாரும் பெயரளவில் மட்டுமே இருக்கின்றனவா என்ற கேள்வியையும் ஜனாதிபதியினதும் அவரின் அரசாங்கத்தினதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்பவே அவை செயற்படுகின்றனவா என்ற கேள்வியையும் ஏற்படுத்தி உள்ளது.

அதேவேளை, மணிவண்ணன் அரசியல் உள்நோக்கம் கருதி, வேண்டும் என்றே கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்ற உண்மையையும் அமைச்சரின் கூற்று வெளிப்படுத்தி நிற்கின்றது. மணிவண்ணனுக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளித்தமை உண்மை என்றால், மணிவண்ணன் ஏதோ தவறு செய்துள்ளார் என்று அர்த்தப்படும்.

ஆனால், மணிவண்ணன் செய்தது தவறு என்று பொலிஸாரினால் நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியவில்லை. ஆகவே, ஜனாதிபதி என்ன அடிப்படையில் மணிவண்ணனுக்கு மன்னிப்பு வழங்கியுள்ளார்?

அமைச்சர் ஏற்கனவே கூறியது போலவே, மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமையுடன் அவர் மீது பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

ஆனால், அதேவேளை, யாழ்ப்பாண நீதிமன்றத்தில் பொலிஸார் மற்றும் மணிவண்ணன் தரப்பு வாத பிரதிவாதங்களைக் கேட்டு அறிந்த பின்னரேயே மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என அறிகின்றேன்.

ஆனால், மணிவண்ணனுக்கு ஜனாதிபதியினால் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தேவானந்தா கூறியிருப்பதும் மணிவண்ணன் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லப்படுவதற்கு முன்னதாகவே அவர் பிணையில் விடுதலை செய்யப்படுவார் என்றும், பொலிஸார் இவ்வாறுதான் நடந்து கொள்வார்கள் என்றும், அமைச்சர் முன்னதாகவே கூறியிருப்பது, இந்த நாட்டில் பொலிஸ் திணைக்களமும் நீதிமன்றங்களும் எந்தளவுக்குச் சுயாதீனத்தை இழந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரமாகக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான செயல்களை பொலிஸ் திணைக்களத்தையும் நீதிமன்றங்களையும் அவமதிக்கும் செயற்பாடுகளாகவும் கொள்ள முடியும்.

இதுதொடர்பில், ஜனாதிபதியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே பொது மக்கள் இம்சைப்படப் போகின்றார்கள் என்றால் நீதிமன்றங்கள் எதற்காக? பொலிஸார் மக்களின் பொலிஸாரா ஜனாதிபதியின் கையாள்களா? விடை வேண்டும். – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் தலைமையகத்தில் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சிகளின் கலந்துரையாடலின்போதும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எது எவ்வாறாயினும், ஏப்ரல் 19ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலின்போது குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:–

கொழும்புத் துறைமுக நகரம் நாட்டின் ஏனைய பொருளாதார வலயங்களைக் காட்டிலும் மாறுபட்ட தன்மையைக் கொண்டுள்ளது.

ஒரு நாடு ஒரு சட்டம் என்பது இந்த அரசின் பெயரளவான கொள்கை மாத்திரமே. கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவானது விசேட பொருளாதார வலயமாக ஸ்தாபிக்க பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார வலயத்துக்குள் உள்ளடக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் பொருளாதாரம் வலயத்தை கட்டுப்படுத்தும் சட்டங்கள் கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழு ஸ்தாபிப்புக்கான சட்ட மூலத்திலிருந்து விடுப்பட்டுள்ளது.

இலங்கைக்குப் பொருத்தமற்ற பல விடயங்கள் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் பிறிதொரு நாட்டை உருவாக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகரப்பொருளாதார ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது.

இலங்கை சீனாவின் கடன் பொறிக்குள் சிக்குண்டுள்ளமை தொடர்பில் சர்வதேச நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன. சீனாவிடம் கடன் பெறுவதற்கு முன்னர் ஒரு சில நாடுகளின் நிலைமை குறித்து சர்வதேச நாடுகள் ஆராயும் போது அவ்விடத்தில் இலங்கை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப்படுகின்றது. அண்மையில் பங்களாதேஷ் நாட்டு அரசியல் பிரமுகர் இலங்கை சீனா உறவு குறித்து குறிப்பிட்டமை கவனத்துக்குரியது.

நாட்டு மக்கள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். மன நிம்மதியுடன் உணவு உண்ண முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த அரசு ஆட்சிக் காலத்தை நிறைவு செய்யும் போது நாட்டு மக்களின் எதிர்காலம் எவ்வாறானதாக இருக்கும்? எவருக்கு அடிபணிந்து இருக்க வேண்டும்? என்ற அச்சம் எழுந்துள்ளது.

கொழும்புத் துறைமுக நகர விவகாரம் குறித்து நாட்டு மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் – என்றார்.

## யாழில் இயங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்

புத்தாண்டு கொண்டாட்டம் காரணமாக திரையரங்குகளில் பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடல் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக குறித்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

## யாழ்.மக்களுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்மாதிரி நடவடிக்கை தவறாக சித்திரிக்கப்பட்டே நான் கைதுசெய்யப்பட்டேன்.

'தூய்மையான நகரம், தூய்மையான கரங்கள்' என்று மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு அமைவாக நடந்துகொள்வதே எனது பணி. மக்களுக்கான எனது பயணம் தொடரும்.

மிக நெருடலான சூழ்நிலையில் மக்கள், உள்நாட்டு – வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள், தூதரகங்கள் , ஊடகங்கள், புலம்பெயர் உறவுகள், நண்பர்கள், ஆதரவாளர்கள் எனக்காகப் பல தரப்பினர் குரல் கொடுத்தனர்.

என்னுடைய பயணம் மிக நேர்மையானது; வெளிப்படையானது; மக்களுக்கானது.

எனக்காகக் குரல் கொடுத்த அத்தனை உள்ளங்களுக்கும் மன நிறைவுடன் சிரம் தாழ்ந்து நன்றி கூறுகின்றேன் – என்றார்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடம் இரண்டிலும் 640 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது 18 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் 17 பேரும், கிளிநொச்சியில் ஒருவரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள். மற்றைய ஒருவர் யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணியாற்றுபவர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நால்வருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்ற இருவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சேர்க்கப்பட்ட நால்வருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் நால்வரும் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

சங்கானை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்குச் சிகிச்சைக்குச் சென்ற இருவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, ஊடகவிய லாளர் மலிக அபேகோன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதானை பொலிஸ் நிலையத்தில் மலிக அபேகோன் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார் என அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

'மலிக அபேகோன் தாக்கப்படவில்லை' எனப் பொலிஸார் நீதிமன்றத்தில் மருத்துவ அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில், பாதிக்கப்பட்டவர் தரப்பில் எழுந்த எதிர்ப்பின் காரணமாக சிறைச்சாலை மருத்துவ அதிகாரி மூலம் மீண்டும் மருத்துவ அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு மாலிகாகந்த நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், எதிர்வரும் 12 ஆம் திகதி வரை ஊடகவியலாளரை தடுப்புக்காவலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் மீதான தாக்குதலைக் கண்டித்துள்ள சுதந்திர ஊடக இயக்கம், பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்தி, அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் அலை ஏற்படுவதைத் தடுக்க மக்களின் நடவடிக்கை முக்கியமானது

புத்தாண்டுக் காலத்தில் பொதுமக்கள் நடந்துகொள்ளும் விதத்தைப் பொறுத்தே மூன்றாம் அலை தோன்றுவதற்கான அல்லது தடுப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கத் தவறியமை பண்டிகைக் காலங்களில் கொழும்பில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் ஏராளமான மக்கள் கூட்டத்துக்கு வழிவகுத்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியாகும் நோயாளிகள் தொடர்ந்தும் அடையாளம் காணப்படும் இந்தச் சூழ்நிலையில், சமூகத்திலிருந்து அதிகளவிலான நோயாளிகள் பதிவாகலாம் என்றும் கூறினார்.

இது சுகாதார அறிவுறுத்தல்கள் மீறப்பட்டுள்ளமையை காட்டுவதாக சுட்டிக்காட்டிய அவர், இதுபோன்ற சூழ்நிலையில் பண்டிகைக் காலத்திற்குப் பின்னர் நாட்டில் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நீரில் மூழ்கி காணாமல்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்திக் குளத்தில் நீரில் மூழ்கி காணாமல்போன நபர் நேற்று அதிகாலை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பிரதேசவாசிகளுடன் இணைந்து பொலிஸார் முன்னெடுத்த சுமார் 15 மணிநேர போராட்டத்தின் பின்னரே உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடிநிலம் பகுதியில் வசிக்கும் நான்கு பெண் பிள்ளைகளின் தந்தையான காத்தமுத்து மேகநாதன் (வயது 62) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் குறித்த நபர் மண்டானை, இத்திக் குளத்தில் நீராடுவதற்காக இறங்கியுள்ளார். இதன்போதே அவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

அதன்பின்னர் குளக்கரையில் அவரது உடைகள் மற்றும் பாதணி என்பனவும் மீட்கப்பட்டுள்ளதுடன், பிரதேச வாசிகளால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், பிரேதசவாசிகளுடன் இணைந்து காணாமல்போன நபரைக் கண்டு பிடிப்பதற்கான மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அது மாத்திரமன்றி மீட்பு நடவடிக்கைக்காக கடற்படையினரும் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்திருந்தபோதும், குளத்தின் ஆழமற்ற தன்மை மற்றும் முதலைகளின் அச்சுறுத்தல் காரணமாக அவர்களால் தங்களது சேவைகளை வழங்க இயலாது போயுள்ளது.

தொடர்ந்தும் திருக்கோவில் பிரதேச சபை அதிகாரிகள், பிரதேசவாசிகள் மற்றும் மீன்பிடி தோணி என்பவற்றின் உதவியுடன் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாக நேற்று அதிகாலை 12.45 மணியளவில் காணாமல்போன நபர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த நிலையில் அவரது உடல் சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளுக்காக மரண விசாரணை அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அதன் பின்னர் அவரது சடலத்தை பிரேத பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத் தகவல்களின் படி இந்த நபர் குளத்தில் உள்ள முதலையின் பிடியில் சிக்குண்டு காணாமல்போனதாக கூறப்பட்டிருந்தது. எனினும் தற்போதைய தகவல்கள் அவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சமுர்த்தி பயனர்களுக்கு நிவாரண கொடுப்பனவு



சமுர்த்திபயனர்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வரையறையற்ற அதிவேக இணைய சேவை விரைவில்

வரையறையற்ற இணைய சேவைகளை வழங்குவதற்காக தொடர்புடைய சேவை வழங்குநர்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு தங்களது திட்டங்களை சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் வாரம் முதல் குறித்த பக்கேஜை அறிமுகம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இணையத்தளசேவைவழங்குநர்கள் சமர்ப்பித்த திட்டங்களை பரிசீலித்த பிறகு, அவற்றை செயல்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது. இதனூடாக கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துபவர்களுக்கு அதிவேக இணைய வசதிகளை தொடர்ந்து வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

ST.ANTONY'S COMPUTER
ASUS DELL hp
மேசைக்கணினிகள் (Desktop pc) 60,000 ரூபா முதல்
WARRANTY 2 YEARS WARRANTY
189, K.K.S Road, Jaffna Town.
021 222 4865
075 069 8608

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

Online. Cleaning & Caring (PVT) LTD
உங்கள் வீடுகள், கடைத் தொகுதிகள் மற்றும் நிறுவனங்கள், அலுவலக பணியிடங்களுக்கு சுத்திகரிப்புச் சேவை தேவைப்படுபவர்களும்.
வீட்டுப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு வேலைகளுக்கு ஆட்கள் தேவைப்படுபவர்களும் தொடர்புகொள்ளவும்.
வீட்டு பணியாட்கள் தேவை. 20 - 55 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 077 435 0737

Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Nurses, Engineering Diploma holders in HNDE, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
Contact :
021 221 56 56
076 122 15 66
070 330 55 00
பிரான்ஸ், ஜேர்மனி பெல்ஜியம்,
1100/= (11 kg க்கு மேல்)
டென்மார்க் நெதர்லாந்து
லண்டன் 1000/= (11 kg க்கு மேல்)
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி கைதடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு கனகராயன் குளம்
மல்லாவி மன்னார் வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எப்படிச் சமாளிப்போம்?

**வெற்றிகரமாகக் கொரோனவை அடக்கி வருவதாக மெச்சிப் பேசப்பட்ட இந்தியாவில் இப்போது நிலைமை கட்டுமீறும் எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. விவகாரம் தலைகீழாக மாறியுள்ளது.**

**உலக அளவில் கொரோனாத் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை வீதத்தில் இந்தியா மூன்றாவதாக உள்ளது. தொடர்ந்து முதலிடம் அமெரிக்காவுக்கு. இரண்டாம் இடம் பிரேசிலுக்கு.**

**அனால், இப்போது தினசரி தொற்றாளர் எணிக்கை வீதம் அதிகரிக்கும் நாடுகளின் பட்டியலில் முதலிடம் இந்தியாவுக்கு.**

**நேற்று முன்தினம் மட்டும் அங்கு ஒரு நாளில் ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 384 பேருக்குத் தொற்று எற்பட்டுள்ளது.**

**கொரோனா பரவத் தொடங்கிய காலத்தில் இந்தியாவில் பரவல் வீச்சம் அதிகமாகவே இருந்தது. தினசரி ஒரு லட்சத்தைத் தொடும் நிலையில் அந்த எண்ணிக்கை காணப்பட்டது. ஆனால் தனது கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலம் அந்த எணிக்கையை தினசரி சராசரியாக இருபதாயிரத்துக்கும் குறைவு என்ற நிலைமைக்கு பாரதநாடு – அந்தப் பரந்த நாடு – கொண்டுவந்தது. இரண்டு, மூன்று மாதங்களுக்கு நிலைமை அப்படித்தான் சீரான கட்டுக்குள் இருந்தது.**

**அந்தச் சமயத்தில்தான் கொரோனாத் தடுப்பூசி உற்பத்தியிலும் இந்தியா முன்னணிக்கு வந்தது. பல உலக நாடுகளிற்கு இவ் விடயத்தில் அது முன்மாதிரியாக மாறியது. இந்தியாவில் இருந்து, உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் 85 நாடுகளிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.**

**கொரோனாப் பாதிப்புக்கள், பின்னடைவுகளுக்கு மத்தியிலும், கொரோனாத் தடுப்பூசி மூலம் உலக நாடுகளுடன் உயர்ந்த இராஜதந்திரத் தொடர்பாடல்களை இந்தியா மேம்படுத்தி, தனது நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொண்டது என விமர்சகர்கள், அரசியல் பார்வையாளர்கள் குறிப்பிட்டனர். 'கொவிட் இராஜதந்திரம்' என புதுடில்லியின் அந்த உலகளாவிய இராஜதந்திரத் தொடர்பாடல் பாராட்டப்பட்டது.**

**ஆனால், இந்தியாவில் இன்று நிலைமை மோசம். கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் சரிவரத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படாமையாலோ, என்னவோ இரட்டை இறக்கை கட்டி மிக வேகமாக அது பரவி வருகிறது. அது தொடர்பில் இந்திய அரசுத் தலைமை அதிர்ந்து போயிருப்பதாகவும் தகவல்.**

**நேற்று முன்தினம் ஒரே நாளில் அங்கு எண்ணூறு பேர் வரை கொரோனாவால் மரணித்துள்ளனர். மொத்த கொரோனா மரணங்கள் ஒரு லட்சத்து எழுபதாயிரத்தை எட்டுகிறது.**

**இதுவரை அங்கு ஒரு கோடி 32 லட்சம் பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். சுமார் ஒரு கோடி இருபது லட்சம் பேர் தொற்றிலிருந்து குணமடைந்து மீண்டுள்ளனர். பத்து லட்சத்துக்கும் சற்று அதிகமான எண்ணிக்கையினர் கொரோனா சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

**அதேசமயம், இந்திய முழுவதும் சுமார் பத்துக் கோடிப் பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கின்றது. அப்படி செலுத்திய பின்னரும் தினசரி ஒன்று முதல் ஒன்றரை லட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்படுகின்றது என்பது மலைக்க வைக்கும் உண்மை.**

**இவ்விடயத்தை ஒட்டி இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி, பிரதமர் மோடிக்கு எழுதியுள்ள கடிதம் முக்கியத்துவம் பெறுகிறது.**

***“இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். நாட்டில் மக்களுக்கு தடுப்பூசி பற்றாக்குறையாக உள்ள சமயத்தில் ஏற்றுமதியைத் தடுக்க வேண்டும். இச்சமயத்தில் ஆறு கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.***

***“புதுடில்லி அரசு தனது இராஜதந்திர செல்வாக்கைக் காட்டுவதற்காகத் தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்வதை விடுத்து அவற்றின் மூலம் நாட்டு மக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.”***
**– என்று சீறியிருக்கின்றார் ராகுல் காந்தி.**

**இந்தியாவின் இந்த நெருக்கடிப் பின்புலத்தில் இலங்கைக்கும் இந்தியத் தயாரிப்பு கொவிட் தடுப்பூசிகள் தடையின்றிக் கிடைப்பது சந்தேகத்துக்குரியதாகவே மாறி வருகின்றது.**

**உலகில் பெருமளவில் தடுப்பூசிகளைத் தயாரித்துத் தள்ளும் இந்தியாவிலேயே உள்ளூர் பாவனைக்குத் தேவையான தடுப்பூசிகள் இல்லை என்ற நெருக்கடி இருக்குமானால், இலங்கை நிலைமையைச் சொல்லத் தேவையில்லை.**

**வடக்கில் – குறிப்பாக யாழ். குடாநாட்டில் – கொரோனாப் பேரரக்கன் தன் கைவரிசையைத் தீவிரமாகக் காட்டத் தலைப்பட்டுள்ளான்.**

**எப்படிச் சமாளித்து, எதிர்கொண்டு, நிமிரப்போகின்றோம்?**

# யுத்தத்தில் அரசின் புலனாய்வாளர்களே ஈஸ்டர் தாக்குதலில் சூத்திர தாரர்கள்

## ஜே.வி.பி. சந்தேகம்



யுத்தகாலத்தில் அரசாங்கத்துக்கு புலனாய்வு தகவல்களைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்பட்டவர்கள் ஏப்ரல் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு அரசாங்கம் சம்பளம் வழங்கி பயன்படுத்தியவர்களுக்கு எந்த காலத்தில் அவர்களுக்கு சம்பளம் வழங்கியது நிறுத்தப்பட்டது தொடர்பில் அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும். அத்துடன் தற்போது அவர்களின் நிலை என்ன என்பது தொடர்பாக இதுவரை அரசாங்கம் பதிலளிக்கவில்லை என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித் ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான ஆறாவது நாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மைத்திரி, ரணில் அரசாங்கம் புலனாய்வு துறையின் தகவல்களின் பிரகாரம் செயற்பட்டிருந்தால் ஏப்ரல் குண்டுத்தாக்குதலை தடுத்திருக்கலாம். தகவல் கிடைத்தும் அதுதொடர்பில் அசமந்தப்போக்கில் இருந்த கடந்த அரசாங்கம் இந்தத் தாக்குதலின் பொறுப்பில் இருந்து தப்பிக்க முடியாது.

அத்துடன் அரசாங்கத்தால் சம்பளம் வழங்கப்பட்டவர்கள் ஏப்ரல் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். யுத்த காலத்தில் புலனாய்வு தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக முஸ்லிம் நபர்களை அரசாங்கம் சம்பளம் வழங்கி வைத்திருந்தமை அனைவரும் தெரிந்த விடயம். அவ்வாறு புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கம் நபர்களைப் பயன்படுத்தியதும், அவர்களுக்கு சம்பளம் வழங்கியதும் தவறு என நாங்கள் தெரிவிக்கவில்லை.

ஆனால் இவ்வாறு சம்பளம் வழங்கி அரசாங்கம் பயன்படுத்தியவர்களுக்கு எந்தக் காலத்தில் சம்பளம் வழங்குவது நிறுத்தப்பட்டது? தற்போது அவர்களின் நிலை என்ன? இதுதொடர்பாக எந்தப் பதிலையும் அரசாங்கம் வழங்கவில்லை. இவ்வாறு சம்பளம் வழங்கி பயன்படுத்தப்பட்டவர்கள் தற்போதும் அரசியலுக்காக பயன்படுத்தப்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது.

மேலும் ஏப்ரல் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடித்து, தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற அழுத்தத்தை கர்த்தினால் மெல்கம் ரஞ்சித் தொடர்ந்து இந்த அரசாங்கத்துக்கு மேற்கொண்டுவந்தார். அந்த அழுத்தத்தில் இருந்து மீள்வதற்கே, தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என அமைச்சர் சரத் வீரசேகர வெளிப்படுத்தி இருக்கின்றார். அமைச்சரின் இந்தக் கூற்று சிறுபிள்ளைத்தனமானதாகும்.

அத்துடன் நௌபர் மௌலவி 2014 இல் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் பக்தாதியுடன் இணைந்துகொண்டு, அவர் இலங்கையில் அந்த அமைப்பின் உறுப்பினராகச் செயற்பட்டு வந்தார் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார். 2041 இல் எமது நாட்டில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் மஹிந்த ராஜபக்ஷ. பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. அன்று இந்த அரசாங்கத்துக்கு இதனை தடுக்க முடியாமல் போயிருக்கின்றது.

அத்துடன் குண்டுத்தாக்குதலில் கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை கர்த்தினால் மெல்கம் ரஞ்சித் ஏற்றுக்கொண்டார். அதனால் தான் இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடித்து, சட்டத்தை நிலைநாட்டவேண்டும் என அவர் தொடர்ந்து அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார். – என்றார்.

# கொரோனாவிலிருந்து 184 பேர் குணமடைவு

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று மேலும் 184 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 91ஆயிரத்து 456 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 595 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# வீதி பெயர்ப்பலகையால் கிளிநொச்சியில் சர்ச்சை




கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியின் பெயரில் திறக்கப்பட்ட வீதியின் பெயர்ப்பலகை விவகாரம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் நேற்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த வீதியின் பெயரை வெற்றிவீதி என பெயரிடப்பட்டு பெயர்ப்பலகையொன்று கடந்த 28.03.2021 ஆம் திகதி அன்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் பயங்கரவாத தடுப்பு பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கிளிநொச்சி பொலிஸார் நேற்று கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரை அழைத்து விசாரணை மேற்கொண்டனர்.

நேற்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் அழைக்கப்பட்ட தவிசாளரிடம் சுமார் ஒரு மணிநேரம் விசாரணை இடம்பெற்றதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது, குறித்த பெயருக்கு சொந்தமானவர் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி எனவும், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் சமூக மட்ட செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தமைக்காக அவரது பெயரை பொதுமக்கள் சூட்டினர் எனவும் நேற்று இடம்பெற்ற விசாரணைகளின் போது பொலிஸாருக்கு தெரிவித்தார் எனக் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

குறித்த வீதி பிரதேச சபைகள் சட்டத்துக்கு அமைவாகவோ அல்லது, வர்த்தமானி அறிவித்தல் ஊடாகவோ பிரதேச சபையால் திறந்து வைக்கப்படவில்லை எனவும், பொது மக்கள் தாமாக முன்வந்து வீதிக்கு பெயர் வைக்க ஏற்பாடு செய்த நிகழ்வில் மக்கள் பிரதிநிதியாக தானும் கலந்து கொண்டார் எனவும் விசாரணைகளில் தான் குறிப்பிட்டதாக தெரிவித்தார்.

வீதிப்பெயர்ப்பலகையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கும் வகையில் செயற்பட்டதாக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டனர் எனவும் தவிசாளர் தெரிவித்தார்.

அதற்கு அமைவாக தாம் நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேயர் கைதை அடுத்து நடந்தவை என்ன?

● ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இடம்பெற்ற ஒரு சம்பவத்திற்காக யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் மணிவண்ணன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்ட சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட 20 வரையான சட்டத்தரணிகள் மன்றில் ஆஜராகியமை உலகறிந்த விடயம். இதிலே எவருமே அறியாத விடயங்கள் என்பதற்கு அப்பால் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் கூட அறியாத பல விடயங்களும் இடம்பெற்றன.

மாநகர முதல்வர் வெளிவந்த செய்தியை வெளியிட்ட கையோடு மாவட்டத்தின் மூன்று மூத்த அரச அதிகாரிகள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு (அரச அதிகாரிகள் என்பதனால் பெயரை பதிவிட விரும்பவில்லை) அவர்கள் கேட்டுக்கொண்டமை இந்த விடயங்களை எழுதத் தூண்டியது..

### சுமந்திரனின் உதவியை நாடிய மணிவண்ணன்


சர்ச்சை ஆரம்பித்த உடனேயே சுமந்திரனின் உதவியை நாடினார் மேயர் மணிவண்ணன்.

7 ஆம் திகதி (புதன்) மாலை முதலில் மாநகர முதல்வருடன் பொலிஸார் தொடர்பு கொண்டதன் பின்பே மாநகர ஆணையாளரை அவர்கள் விசாரணைக்காக அழைத்தனர். முதல்வருடன் பொலிஸார் தொடர்பு கொண்டமையை அடுத்து இரவு 7.30 மணியளவிலேயே முதல்வர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைத் தொடர்பு கொண்டு நிலைமையைத் தெரிவித்தார்.

இதன்போது “ஊடகங்கள் வழியாக விடயத்தை அறிந்தேன். மேலதிக நிலைமை என்ன?” என நாடாளுமன்ற உறுப்பினர் விடயங்களை மேயரிடம் கேட்டறிந்தார்.

மறுநாள் மாலை மணிவண்ணனின் வீட்டிற்குச் சென்ற பொலிஸார் மணிவண்ணனைத் தேடியபோது மணிவண்ணன் அங்கே நிற்கவில்லை என்ற பதில் தாயாரிடம் இருந்து கிடைத்தது. இருந்தபோதும் நம்பிக்கை கொள்ளாத பொலிஸார் வீட்டின் மதில்களால் கண்கொண்டு துளாவ முற்பட்டனர். இதனையடுத்து விசாரணையின் பின்பு கைது செய்தாலும் பரவாயில்லை, கைதின் பின் விசாரணை என்ற நிலைமை வரக்கூடாது என்பதனால் உடனடியாகவே முதல்வரும் சக மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபனும் தாங்களாகவே பொலிஸ் நிலையம் சென்றனர்.

தனித்தனியான அறைகளுக்கு அவர்கள் பிரிக்கப்பட்டு விசாரணை இடம்பெற்றது. 'பீஸா'விற்கு பெயர்போன பொலிஸ் பொறுப்பதிகாரியினால பிட்டும் கறியும் அங்கு



வழங்கப்பட்டு விசாரணை தொடர்ந்தது.

நள்ளிரவு 12 மணியைத் தாண்டிய சமயம் தன்னைக் கைது செய்து கொண்டு செல்கின்றனர் என மேயர் மணிவண்ணன் பார்த்தீபனிடம் கூறியபோதும் பார்த்தீபன் அதனை நகைச்சுவை என்றே எண்ணினார். இருப்பினும் சிறிது நேரத்தில் கைத்தொலைபேசி உள்ளிட்ட உடமைகளை எடுத்து அவர் வழங்கியபோதே அது உண்மை என அதிர்ச்சியுடன் உணர்ந்தார்.

இதனை அடுத்து அதிகாலைவேளை பலர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அழைப்பு எடுத்தமையோடு அழைப்புக் கிடைக்காத நிலையில் குறுந் தகவலும் அனுப்பினர்.

மணி கைது செய்யப்பட்டவுடன் விடுவிப்பிற்கான சகல வகையான முயற்சிகளிலும் ஈடுபட்டார் சுமந்திரன்.

9ஆம் திகதி காலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் முதல்வரின் சகோதரனும் சட்டத்தரணியுமான திருக்குமரன் உட்பட பலர் இவ்விடயம் குறித்து உரையாடினர். இதன்போது இன்று யாழ் வருவதற்கு உள்ளேன், இருப்பினும் சற்று முன்கூட்டியே விரைந்து வருகிறேன், வவுனியாவில் சந்திக்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் பதிலளித்துள்ளார்.

இவ்வாறு பதிலளித்த சுமந்திரன் கொழும்பில் இருந்து யாழ். நோக்கிப் புறப்பட்ட சமயம் சக நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன் மற்றும் இ.சாணக்கியனைத் தொடர்பு கொண்டு மணிவண்ணனின் கைது தொடர்பில் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புமாறும் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு சக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தமையோடு சட்டத்தரணிகள் சங்கத் தலைவரான சாளிய பீரிஸுடன் தொடர்பு கொண்டு சக சட்டத்தரணி என்ற வகையில் அடிப்படை உரிமை மீறல் வழக்கை கொழும்பு உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்ய ஏற்பாடு செய்யுமாறும், அந்த வழக்கினைத் தாக்கல் செய்த பின்பு தானும் வழக்கில் சேர்ந்து ஆஜராவார் எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இந்த விடயத்தினை முதலில் சர்ச்சையாக்கியவர் சஜித் பிரேமதாஸவின் அணியை சார்ந்தவர் என்ற வகையில் சஜித் பிரேமதாஸவையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை தெளிவு படுத்தினார். இதற்கும் புலி உருவாக்கம் என்ற விடயத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பதனையும் தெளிவுபடுத்தி இன ரீதியிலான முரண்பாட்டை வளர்க்காது இருக்க உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

### சிறிதரன், சாணக்கியன், கஜேந்திரகுமார் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினர்

இந்த நிலையில் 9 ஆம் திகதி (வெள்ளி) பகல் நாடாளுமன்றம் கூடியது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் இ.சாணக்கியன் ஆகியோரை மணிவண்ணன் விடயம் தொடர்பில் பிரஸ்தாபித்துக் கண்டனத்தை பதிவு செய்யுமாறு சுமந்திரன் கோரியிருந்தார். சிறிதரன் பேசுவதற்கான நேரம் கிடைப்பதற்குக் கால தாமதமானமையால், அங்கிருந்து புறப்பட முயன்ற சிறிதரன் எம்.பி., மேயர் மணிவண்ணன் விடயத்தை நீங்களே பதிவு செய்யுங்கள் என சாணக்கியனிடம் விநயமாகக் கேட்டார்.

இதையடுத்து சிறிதரன் கால தாமதமான போதும் சிறிதரன் நின்று இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் உரையாற்றினார். சாணக்கியன் சிங்களத்தில் உரையாற்றினார். (இதற்கும் சுமந்திரன் அணி பட்டம் சூட்டப்படுமோ தெரியாது.)

இதற்கிடையில் கொழும்பில் இருந்து அதிகாலை புறப்பட்டு வவுனியா பயங்கரவாத தடுப்பு பொலிஸ் பிரிவு முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வந்த போது அங்கே மணிவண்ணனின் சகோதரனும் சட்டத்தரணியுமான திருக்குமரன் உட்பட பல சட்டத்தரணிகள் காத்திருந்தனர். அங்கே நின்ற சகோதரனை சந்தித்து கொழும்பில் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு விளக்கினார் சுமந்திரன்.

“வவுனியாவில் நின்று மணிவண்ணனைச் சந்தித்து வாருங்கள். உங்களைச் சந்திக்க விடாமல் திருப்பினால் அதுவும் பின்னர் அடிப்படை உரிமை மீறல் வழக்கில் முக்கிய விடயமாகும். கைதானவருக்குக் சட்ட ஆலோசனை மறுக்கப்படுவதை நாம் உயர்நீதிமன்றத்தில் முறையிடலாம். நானும் இங்கே நின்று எனக்கு முன்னால் அனுமதி மறுக்கப்படுமானால் அது தொடர்பான விடயத்தில் நானும் சாட்சியாகி விடுவேன். பின்பு வழக்கில் அந்த விடயத்தில் நான் ஆஜராகி வாதிட முடியாது” என்பதைத் தெரிவித்து யாழ் நோக்கி புறப்பட்டார் அவர்.

இவ்வாறு யாழ் வந்ததும் அடுத்த படிநிலைகள் தொடர்பில் ஆராய்ந்து இது தொடர்பில் உரியவர்களுடன்



தொடர்புகொண்டு மணிவண்ணன் விடுவிப்புக்குப் பெரிய பங்காற்றினார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன். இன்னும் பல விடயங்கள் உள்ளபோதும் அவற்றை அரசியல் நாகரிகம் மற்றும் சட்ட வரையறை கருதித் தவிர்க்கிறேன்.

### பிட்டு நாயகனின் சுவையான கருத்து

இவ்விடயத்தை ஒட்டி இடம்பெற்ற வேறு ஒரு விடயத்தையும்பதிவு செய்ய வேண்டும்.

மணிவண்ணனை யாழ். நீதிமன்றுக்கு அழைத்து வருவதான தகவலையடுத்து செய்தியாளர்கள், பொலிஸார், சட்டத்தரணிகள் நீதிமன்றம் முன்பாகக் கூடி நின்றனர். அச்சமயம் யாழ்ப்பாணம் பிரதம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஓர் ஊடகவியலாளரிடம் இதனைக் கூறினார்.

“என்னை வைத்தே வடக்கு அரசியல் நடக்கப்போகுது. ஏற்கனவே பிட்டுக் கதையை வைத்து இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரபலமாகிவிட்டனர்.(அவர்கள் ஏற்கனவே பிரபலம்). இனி மணி இதை வைத்தே மாகாண சபையில் வாக்கு எடுத்து வென்று விடுவார். (இருக்கலாம்) இவற்றினால் என் நடவடிக்கைகளைப் பயன்படுத்தி எல்லாரும் ஹீரோவாகி விடுவர். நான்தான் கடைசியில் வில்லன். ஏதோ செய்யட்டும்” – என விட்டேத்தியாக, அதே நேரம் நகைச்சுவையாகவும் கூறிச் சிரித்தார்.

இதேநேரம் மணிவண்ணன் தரப்பில் இருந்து ஒருவர் (மணிவண்ணன் அல்லர்) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் தொடர்பு கொண்டு விடயத்தை கூறியதன் பெயரில் அமைச்சரே 'மணிவண்ணன் அறியாது செய்த தவறை மன்னியுங்கள்!' என ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க வழி செய்தார் என அமைச்சர் தரப்பில் கூறப்படுகின்றது.

இதேநேரம் மணிவண்ணனுக்கு எதிரான வழக்கைத் தாக்கல் செய்தது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸார். ஆனால் வழக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அல்ல என்பது மிகப்பெரிய விடயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எது, எவ்வாறாயினும் மணிவண்ணன் கைது மற்றும் பிணையில் விடுவிப்பு ஆகியவற்றின் பின்னால் என்ன விடயங்கள் கட்டவிழ்ந்தன என்பதில் நான் பகிரக் கூடிய விடயங்களை விவரித்துள்ளேன். இனி விடயங்களைக் கோவையாக்கி, ஊகித்து முடிவு செய்வது வாசகர்களைப் பொறுத்தது.

இதேநேரம் என்னைத் தொடர்பு கொண்ட அதிகாரிகளின் வினாக்களிற்கும் ஏனையோருக்கும் இதன் மூலம் பதில் கிட்டியிருக்கும் எனவும் நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# மனவளக்கலை ஒரு பொக்கிஷம்

அருள்நிதி. ஜெயராணி கந்தசாமி
(மனவளக்கலை ஆசிரியர்)

மனிதகுலம் உயர்வடைந்து பூவுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழங்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம் மனவளக்கலையாகும்.


ஆயகலைகள் அறுபத்து நான்கினுள்ளும் ஒவ்வொரு மனிதனும் தெரிந்து கொள்ள வேண்டிய சிறந்த கலை மனவளக் கலையாகும்.

எத்தொழிலை, எச்செயலைச் செய்யினும் ஒவ்வொருவரினதும் உடல்நலம், மனநலம் காக்க வேண்டியது அவசியமானது.

மனித வாழ்வே சிக்கலுடையதுதான். அறிவாளி, மூடர், செல்வந்தர், ஏழை, வலியவர், எளியவர், படித்தவர், படிக்காதவர், இளைஞர், முதியவர், இல்லறத்தான், துறவறத்தான், ஆண், பெண் எவராயினும் என்ன, ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவுமே வாழ நினைக்கிறார்கள். அப்படி வாழ்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. வாழ்க்கைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் ஏதோ ஒன்று அல்லது பல சிக்கல்களுக்குள்ளாகித் தவித்துக் கொண்டுதான் வாழ்வை நடத்துகிறார்கள்.

சிக்கலைக் களைந்து, வாழ்வில் முன்னேற்றம் அடைந்து, அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கை வாழ்வதற்கு, அறிவில் அறிவாய் சாதனைகள் பல செய்து, மெய்யுணர்வைப் பெற்று, காலத்திற்கு காலம் தோன்றி மறைந்த ரிஷிகள் விட்டுச் சென்ற வாழ்க்கை நல் ஏடுகளைப் புரட்டி, அவற்றின் சாற்றைப் பிழிந்தெடுத்து, பாமர மக்களும் அறியும் வண்ணம் உலக மக்கள் அனைவரின் வாழ்க்கை நலமாகவும், வளமாகவும் வாழ மனவளக்கலை எனும் பொக்கிஷத்தை எமக்களித்த பெருமைக்குரியவர் பாமர மக்களின் தத்துவ ஞானி விஞ்ஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி ஆவர்.

பூவுலகில் பரிணாம வளர்ச்சியில் இறுதியாக பூத்த



மலர்கள் மனிதன் என்கிறார் மகரிஷி. உடல், உயிர், மனம் மூன்றும் சேர்ந்த கலவை மனிதன். மனித வாழ்வில் ஏற்படும் இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் அனைத்திற்கும் மனமே விளை நிலமாகும். மனதின் உயர்வே மனிதனின் உயர்வு. அத்தகைய மனத்தை அறிய மனம் ஒன்றுதான் கருவி. மனத்தை வளம்படுத்தி நாம் மாமனிதராகிட கலியுகத்திற்கேற்ப துளி நியமமும் இல்லாத வாழ்க்கைக் கல்வி மனவளக்கலையாகும். எட்டு வயது முதல் எண்பது வயது வரை பயின்று பயன் பெறக்கூடிய முழுமை நல வாழ்விற்கு எளிய முறையிலான குண்டலினி யோகப்பயிற்சி தான் மகரிஷி தந்த அற்புதக் கலை மனவளக் கலையாகும். இப்பயிற்சி மூலம் நோய் வராமல் தடுக்கலாம். வந்த நோய் மேற்கொண்டு உக்கிரமடையாமல் தடுக்கலாம். தொடர்ந்து பயிற்சி செய்து வரும் போது காலப்போக்கில் குணமடைய வாய்ப்புண்டாகும்.

உடலை வளம்படுத்த எளிய முறை உடற்பயிற்சி. உயிராற்றலைப் பெருக்க காயகல்பம் பயிற்சி. காயம்



என்றால் உடல், கல்பம் என்றால் மருந்தல்ல பயிற்சி.

தன்னை அறிந்து வாழ்வில் திருத்தம் பெற அகத்தாய்வு, தற்சோதனை பயிற்சி. மனதை வளம்படுத்தி இறைஉணர்வு பெற அகத்தவம். இத்துணை மனித வாழ்க்கையிலே மகிழ்ச்சியும், வெற்றியும் வேண்டுமெனில் ஒவ்வொரு தனிமனிதரும் இன, மதம் வேறுபாடின்றிப் பயில வேண்டியது மனவளக்கலைப் பயிற்சி என்பதை பெருமையுடன் தெரிவிக்கிறோம்.

இக்கால கொரோனா போன்ற கொடூரநோய் ஏற்பட்டதால் ஆண்டி முதல் அரசன் வரை உலகளாவிய ரீதியில் முகக்கவசம் அணிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் கொரோனா போய்விடுமா? வீடுகளில் முடங்கிக் கிடக்கவேண்டிய பாரிய இழப்புக்குள் தள்ளப்பட்டுள்ளோம். எந்நோய் வந்தாலென்ன, எத்துன்பம் ஏற்பட்டாலும் எதிர் நீச்சல் போட்டு விரட்ட உயிராற்றலைப் பெருக்கும் காயகல்பம் பயிற்சி உதவும்.

14 வயதில் ஆண் பெண் இருவருக்கும் பருவ மாற்றம் ஏற்படுகிறது. இந்தக் கால கட்டத்தில் தடம் மாறி தடுமாறிப் போகாமல் அவர்களை நெறிப்படுத்தி இறை நிலை உணர்வு பெற்று வருங்கால சந்ததி பண்பாட்டில் சிறந்த தலைமறையாக வளர மனவளக் கலை எழில்மிகு பயிற்சியை நாம் ஒவ்வொருவரும் பயிற்சி பயில்வது நலமளிக்கும்.

ஒரு கொடிய கொரொனா நோய் வந்தது. நாம் அனைவரும் பாதுகாப்பைப் பேண வேண்டும். ஊசி எல்லோருக்கும் போட வேண்டி உள்ளது. இயற்கை அன்னை கோபம் தாங்க முடியாது. சாது மிரண்டால் காடு கொள்ளாது. ஆதலால் மன வளக்கலை பயிற்சி மூலம் உடல் நலம் பேணி உயிர்வளம் பெருக்கி மன நலம் சீராக்கி மகிழ்வாக வாழ மனவளக்கலை பயிற்சி உதவுகிறது. மனிதனது எண்ணம், சொல், செயல் சிறப்பாக்க வழிமுறை சொல்லுகிறது. மனவளக்கலை சிறியோர்க்கு விருந்து, பெரியோர்க்கு மருந்து.

* எண்ணத்தை ஆராய்வதன் மூலம் அறிவுக்கு விழிப்பு நிலை உண்டாகும். நல்லது தீயது உணரும். ஆற்றல் உண்டாகும். வினைப்பதிவுகளை மாற்ற முடியும். வினைப்பதிவின் அடையாளம் உடலின் நோய், உள்ளத்தில் குழப்பம் (களங்கம்). இப்பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க மனவளக்கலை வழிகாட்டுகிறது.

* ஆசை சீரமைத்தல் பயிற்சி மூலம் உடல் நலம், மன வளம், பொருள் வளம், உயர் புகழ் மன நிறைவு உண்டாகும்.

* சினத்தை தவிர்ப்பதால் வாழ்வின் இனிமையும் மகிழ்ச்சியும் ஓங்கும். அனைவரிடமும் நட்பு நலன் பெருகும். முகம் தேஜஸ் சாகத் திகழும்.

* கவலை ஒழித்தல் பயிற்சியினால் அச்சமின்மை, மன அமைதி உடல் நலம் பெறலாம்.

* நான் யார் என்று தெளிவு பெறுவதால் இறை நிலை, பிரபஞ்சம், உடல், உயிர், மனம் குறித்து விளக்கம் கிடைக்கும்.

* வாழ்க வளமுடன் என நம்மையும் பிறரையும் வாழ்த்துவதால் நாமும் நலமாக வாழ்ந்து பிறரையும் நலமாக வாழச் செய்யலாம்.

* மனவளக்கலைப் பயிற்சியை முறையாகப் பயின்று வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம், மனத் தூய்மை, வினைத்தூய்மை பெறமுடியும். அதனடிப்படையில் ஒழுக்கம், கடமை, ஈகை இவை நமது வாழ்வில் இயல்பாக அமையும்.

வாழ்வின் நோக்கத்தை உணர்ந்து வளமாக வாழ விரும்பும் அனைவருக்கும் சிறந்ததொரு வழிகாட்டி



யாக வாழ்நாள் முழுமைக்கும், மன வளக்கலைப் பயிற்சி ஓர் அருமருந்தாகும். அனைவரும் உண்டு களிக்கும் மருந்து குருமகான் அருட் தந்தை, வேதாத்திரி மகரிஷி தந்த மருந்து. அனைவரையும் இன்ப நிலையில் வைக்கும் மருந்து. அனைவரும் ஆனந்த வாழ்வு பெற பலரின் கூட்டுமுயற்சி மூலம் முன்னெடுத்து தலைமையேற்று இறைநிலையுணர்ந்து மக்கள் தொண்டு மகேசன் தொண்டு என்ற வாக்கியத் திற்கிணங்க தொழிலதிபர் முருகானந்தவேல் அவர்களினால் எழுந்த யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோயில் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது.

**வாழ்க வளமுடன்.**

---

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி; இனங்காண்பதில் அரசு தோல்வி

## சரத் பொன்சேகா சாடல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை இனங்காண்பதில் அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்காக, ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை பிரதான சூத்திரதாரியாக அறிவித்துள்ளனர். நௌபர்மௌலவி சஹ்ரானின் சகாவாக இருந்துள்ளாரே தவிர எந்தச் சந்தர்ப்பத்திலும் சஹ்ரானின் தலைவராகச் செயற்பட்டவரல்லர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எதிர்க்கட்சி மீது பழிசுமத்துவதைத் தவிர்த்து அதன் பிரதான சூத்திரதாரியை இனங்காண்பதற்கு அரசாங்கத்தால் முடியாமல் போயுள்ளது. அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்காக கைது செய்யப்பட்டுள்ள ஒரு நபரை தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக அறிவித்துள்ளனர்.

நௌபர்மௌலவி சஹ்ரானின் சகாவாக இருந்துள்ளாரே தவிர எந்தச் சந்தர்ப்பத்திலும் சஹ்ரானின் தலைவராக செயற்பட்டவரல்லர். அவர் இந்தத் தாக்குதலை ஏற்பாடு செய்தார் என்பதற்கு எவ்வித சாட்சியும் இல்லை. எவ்வாறிருப்பினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் தடுக்க முடியாமல் போனது. 2015 இற்கு முன்னர் காணப்பட்ட அரசாங்கத்துடன் சஹ்ரான் தொடர்புகளைக் கொண்டிருந்தார். இது தொடர்பான விடயங்கள் வெளிப்படுத்தப்படாமல் அரசாங்கம் போலியாக செயற்படுகிறது என்றார்.

இதன் போது ரஞ்சன் ராமநாயக்க தொடர்பில் கருத்து தெரிவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா –

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்கு வழங்கப்படக் கூடிய தண்டனை தொடர்பில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. நாம் அறிந்த



சட்டங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக இத்தகையதொரு கடூழிய தண்டனை வழங்க முடியும் என்று நாம் நம்பவில்லை என்று குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியலையும் இனவிடுதலையையும்

## தனித்துச் சுமந்த ஒற்றைப் பனை!

● பனங்காட்டான்



இந்த வாரத்து விடயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னராக, கடந்த வாரம் இப்பத்தியில் குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றி இரண்டு வாசகர்கள் எழுப்பிய சந்தேகத்துக்கு பதிலளிக்க வேண்டிய கடமை உண்டு.

இலங்கைப் படைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென 1990 இல் ஜெனிவாவுக்குச் சென்று குரல் கொடுத்த முதலாவது இலங்கையர் - தோற்றுப் போன அரசியல்வாதியாகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ என்று கடந்த வாரம் எழுதியிருந்தேன்.

கடந்த வருடம் தமது நாற்பதாண்டு அரசியல் வாழ்வு பூர்த்தியைக் கொண்டாடியவர் மஹிந்த என்றும், 2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் தோற்பதற்கு முன்னர் இவர் ஒருபோதும் தோல்வி காணாதவர் என்றும் ஆர்வமுள்ள இருவர் சுட்டிக்காட்டினர்.

மஹிந்த ராஜபக்ஷ முதன்முதலாக தமது 2 ஆவது வயதில், 1970 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையின் பெலியத்த தொகுதியில் வெற்றி பெற்று எம்.பியாகத் தெரிவானார். 1977 பொதுத்தேர்தலிலும், 1983 இடைத்தேர்தலிலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரிடம் இவர் தோல் வியடைந்தார். சத்திர சிகிச்சை மருத்துவரான ரஞ்சித் அத்தபத்து இத்தேர்தல்களில் வெற்றி பெற்றவர்.

இந்த அடிப்படையிலேயே மஹிந்தவை தோற்றுப் போன அரசியல்வாதியென குறிப்பிட்டேன். இவர் கடந்த வருடம் கொண்டாடிய நாற்பது ஆண்டு அரசியல் வாழ்வு என்பது, பன்னிரண்டு ஆண்டுகள் எம்.பியாக இருக்காததையும் உள்ளடக்கியது.

கல்வித் தகைமைகளுடன் மஹிந்த நேரடியாக சட்டக்கல்லூரிக்குள் நுழையாதவர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். 1970 - 1977 காலத்தில் நீதியமைச்சராகவிருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் சட்டக்கல்லூரி அனுமதிக்கு விசேட சலுகை வழங்கியிருக்கவில்லை என்றால், இவர் சட்டத்தரணி ஆகியிருக்க முடியாது. இதனை இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாகக் கூறுவேன்.

இனி, இவ்வார விடயத்துக்கு வருவோம். இந்த மாதம் உலகளாவிய ஈழத்தமிழ் மக்களுக்கு துயரமான ஒன்று. தமிழ் மக்களின் தொடர் துயரினைத் துடைக்க, தாம் இயங்கு நிலையில் இருந்த காலம்வரை தம் வாழ்வை அர்ப்பணித்த இராயப்பு ஜோசப் ஆண்டகை கடந்த முதலாம் திகதி நிலையற்ற உலக வாழ்வைத் துறந்து, நித்திய அமைதியில் இறையடி சேர்ந்தார்.

தனது ஆடுகளுக்காக உயிர் கொடுத்த நல்லாயன் யேசுவை தம் கண்முன் கொண்டு, தம் மக்களுக்காக நல்லதொரு மேய்ப்பராக இவர் பணிபுரிந்த காலம் உயிராபத்து நிறைந்தது.

துறவு வாழ்வில் பொது நிலையினரின் உருவாக்கத்தில் பெரும் கரிசனை கொண்டு, தமது அனைத்துப் பணிகளையும் ஒன்றாக்கி அதில் திருப்தி கொண்டு வாழ்ந்த புனிதர் இவர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற முக்கோட்பாடுகளுடன் வீச்சுக் கொள்ள ஆரம்பித்த வேளை, அரச பயங்கரவாதத்துக்கு முகம் கொடுக்க முடியாது மக்கள் கிராமம் கிராமமாக தவழ்ந்தும், ஊர் ஊராக ஊர்ந்தும், நகரம் நகரமாக நகர்ந்தும் இழப்புடன் இடப்பெயர்வுகளை சந்தித்த காலத்தில் - 1992 இல் இராயப்பு ஜோசப் ஆண்டகை துணிவுடனும் நெஞ்சுரத்துடனும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பொறுப்பை ஏற்றவர்.

பலமுனைத் தாக்குதல்களால் காயப்பட்டவர்களை தமது கைகளால் ஏந்தி மருத்துவமனை கொண்டு சென்றவர். அச்சத்திலும் உயிராபத்திலும் இருந்தவர்களுக்கு தமது பிரசன்னத்தால் ஆறுதலும் தேறுதலும் கொடுத்தவர். நேர்மையாகச் சொல்வதானால், போர்க்காலத்தில் குரலற்றவர்களின் குரலாக ஒலித்தவர் ஆண்டகை அவர்கள்.

உண்மையை உண்மையாக எடுத்துரைக்கும் சந்தர்ப்பங்களில், அரச தலைவர்கள் - அமைச்சர்கள் - படைத்தளபதிகள் - வெளிநாட்டு பிரமுகர்கள் - ராஜதந்திரிகள் என்று பார்க்காது, நேருக்கு நேராக நெஞ்சுரத்தோடு களநிலைமையை எடுத்துக்கூறிய அஞ்சா நெஞ்சர் இவர்.

2009 இல் முள்ளிவாய்க்காலில் உறைநிலை கண்ட போர்க்காலம், ஆயர் அவர்களின் திருப்பணியின் தலையாய காலம் எனலாம்.

**தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற முக்கோட்பாடுகளுடன் வீச்சுக் கொள்ள ஆரம்பித்தவேளை, அரச பயங்கரவாதத்துக்கு முகம் கொடுக்க முடியாது மக்கள் கிராமம் கிராமமாக தவழ்ந்தும், ஊர் ஊராக ஊர்ந்தும், நகரம் நகரமாக நகர்ந்தும் இழப்புடன் இடப்பெயர்வுகளை சந்தித்த காலத்தில் - 1992 இல் இராயப்பு ஜோசப் ஆண்டகை துணிவுடனும் நெஞ்சுரத்துடனும் மன்னார் மறை மாவட்ட ஆயர் பொறுப்பை ஏற்றவர்.**

இந்தக் கொடூர யுத்தத்தில் 1,46,000 இற்கும் மேலான மக்கள் காணாமல் போயுள்ளனர் என்ற புள்ளிவிவரத்தை முதன்முதலாக உரத்துக் கூறியவர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களே.

போதிய ஆதாரங்களை தம் வசம் கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர்களிடமும் சர்வதேச பிரதிநிதிகளிடமும் இப்புள்ளிவிவரத்தை நேரடியாகவும் எழுத்து மூலமும் எடுத்துச் சொன்ன ஆயர் அவர்கள், இலங்கை அரசாங்கம் நியமித்த விசாரணைக் குழுவின் முன்னாலும் இதனை ஒப்புவித்தவர். இவ்வேளை இவருக்கு மறைமுகமாக உயிர் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாயினும், அதனையிட்டு ஆயர் அவர்கள் அச்சம் கொள்ளவில்லை.

போர்க்காலத்தில் வன்னியில் இருந்த மூன்று லட்சம் மக்களில் 1,46,000 வரையானவர்கள் எங்கே போனார்கள் என்று ஆயர் அவர்கள் எழுப்பிய கேள்வி, இந்தப் புள்ளிவிவரத்தின் ரிசிமூலம் என்ன என்ற மற்றொரு கேள்வியை எழுப்பியது.

தாம் கூறிய தரவுக்கு பொறுப்புக் கூற வேண்டியவராக இருந்த ஆயர் அவர்கள், இலங்கை அரசாங்கம் உலக வங்கிக்கு வழங்கிய கடன்பெறு ஆவணம் ஒன்றிலிருந்தே இந்தத் தரவினைப் பெற்றார் என்பதை பலரும் அறிந்திருக்கவில்லை.

வன்னி மாவட்டத்தில் புதிய செயற்திட்டம் ஒன்றை



ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் உலக வங்கியிடம் சமர்ப்பித்த நிதிகோரும் விண்ணப்பத்தில், இம்மாவட்ட மக்களின் தொகை மூன்று லட்சம் வரையானது எனத் தெரிவித்திருந்தது.

அத்துடன், இம்மாவட்டத்தில் வசிப்பவர்களின் வாழ்வாதாரத்துக்கான உணவுப் பொருள்களைப் பெறும் கூப்பன் அட்டைகளும் மூன்று லட்சத்துக்கும் மேலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தன.

போர் உறைநிலைக்குச் சென்ற பின்னர் அரச முகாம்களில் அடைபட்டவர்கள், படையினரால் சிறைபிடிக்கப்பட்டவர்கள், போரின்போது கொல்லப்பட்டவர்கள் எனப்படுவோரின் எண்ணிக்கையை மூன்று லட்சத்திலிருந்து கழித்து வந்த தொகையே 1,46,000 என கணக்கிடப்பட்டது. இவர்களுக்கு என்ன ஆனது? அரசாங்கம் பதில் சொல்ல வேண்டுமென்பதே ஆயர் அவர்கள் முன்வைத்த வாதம்.

சிலவேளை இந்த எண்ணிக்கை சிறிதளவில் முன்னுக்குப்பின் ஏறி இறங்குவதாக இருக்கலாம். போரில் வென்றதாகக் கூறும் அரசாங்கமே இதனைக் கண்டறிந்து பகிரங்கப்படுத்த வேண்டும்.

படையினரிடம் சரணடைந்தவர்களை அல்லது படையினரால் கொண்டு செல்லப்பட்டவர்களை தம்மிடம் இல்லையென்று கூறும் அரச தரப்பு, ஆயர் அவர்கள் கூறிய எண்ணிக்கையை ஒருபோதும் ஏற்காது. ஆனால், 1,46,000 மக்கள் எங்கே என்ற கேள்விக்கான பதிலை நேர்மையான பணியாக தொடர்ந்து எடுக்க வேண்டியது வலி சுமப்போரின் தலையாய கடமை. இதுவே ஆயர் அவர்களின் ஆத்ம சாந்திக்கு அனைவரும் சேர்ந்து செய்ய வேண்டியது.

தமிழ்த் தேசத்தில் அரச பயங்கரவாதம் தலைவிரித்துத் தாண்டவமாடிய கொதிநிலை வேளை, ஆயர் அவர்கள் விடுத்த எந்தக் கோரிக்கையையும் அரச தரப்பு ஏற்கவில்லை. இலங்கையிலுள்ள கத்தோலிக்க திருச்சபையின் மேலிடமும்கூட அவ்வாறே நடந்து கொண்டது.

பேராயர் மல்கம் ரஞ்சித் எப்போதும், ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டகையைப் புறந்தள்ளியே வந்துள்ளார்



என்பதற்கு பல சான்றுகள் உண்டு. தமிழர் தாயகத்தில் அரச பயங்கரவாதம் வேகம் கொண்ட வேளைகளில், ஆயர் அவர்கள் தமது கண்டனத்தைத் தெரிவிக்கையில், பேராயர் தம்மை சிங்களப் பேரினத்தின் ஓர் அங்கமாக நிறுத்தி இவரது கருத்துகளை ஏற்க மறுத்து வந்தார்.

நவாலி தேவாலய குண்டுவீச்சு, நாகர்கோயில் பாடசாலைக் குண்டுவீச்சு போன்ற பல சம்பவங்கள் இதற்கு உதாரணமாக உண்டு.

வண.பிதாக்கள் ஜோர்ஜ் ஜெயராஜசிங்கம் (முருங்கன்), மேரி பஸ்தியான் (வங்காலை), சந்திரா பெர்னாண்டோ (மட்டக்களப்பு), சு. செல்வராஜா (அம்பாறை), யுஜின் ஜோன் ஹெரபேட் (வாழைச்சேனை), மரியாம்பிள்ளை சரத்ஜீவன் (வன்னி), நிஹால் ஜிம் பிறவுன் (அல்லைப்பிட்டி), வின்சன்ட் வினோதராஜா (மீசாலை), நிக்கிலாபிள்ளை பாக்கியரஞ்சித், வன்னிப் போர்முனையில் அகதிகளுக்கு பணியாற்றியபோது காணாமல்போன ஐந்து குருமார்கள் போன்றோரின் விடயங்களில் பேராயர் மல்கம் ரஞ்சித் இன,மத பேதங்களுக்கு அப்பால் நின்று பணியாற்றத் தவறியுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் படையினரால் கூட்டிச்செல்லப்பட்ட வண. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் விடயத்தில் கூட ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் தனித்து நின்றே குரலெழுப்பினார்.

அமைதி, சமாதானம், மனிதநேயம், மனித உரிமை ஆகியவற்றுக்காக ஓயாது குரல்கொடுத்த ஆயர் தமது எழுபத்தைந்தாவது வயதில், 2015 ஆம் ஆண்டு திடீர் சுகவீனத்தால் ஓய்வுபெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், இரவுப் போசனம் உண்ட பின்னரே ஆயர் அவர்கள் திடீர் சுகவீனமுற்றார். இவரால் பேச முடியாது, நடமாட முடியாது போனதற்கும் இரவு உணவுக்கும் சம்பந்தம் இருக்கலாமென்ற சந்தேகம் இன்றுவரை தீர்க்கப்படாமலே உள்ளது.

உடல் நலிவுற்று, படுக்கையில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்த நிலையிலும் இனத்தின் காவலராகவே அவரை மக்கள் மதித்தனர். பேச முடியாதவராயினும் அதற்கும் அப்பால் கடைசி நிமிடம்வரை தனது மக்களை நேசித்த ஒருவராகவே மக்கள் அவரைப் பார்த்தனர்.

2014 ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கம் வழங்கிய - 'இனமான ஏந்தல்' எனும் புகழ் விருதுக்குத் தகுதியானவராக, இறை பணியுடன் இனவிடுதலையையும் தம் தலைமேல் தனித்துச் சுமந்து வாழ்ந்த ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தமிழினத்தின் முற்றத்தில் காப்பரணாகவும் காவலராகவும் நின்ற ஒற்றைப் பனை!

தமிழ் இனம் விடுதலை பெற்று உரிமையுடன் வாழும் காலந்தோறும் இந்த முற்றத்து ஒற்றைப் பனை ஓங்கி நின்று ஒளி பரப்பும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# கைதிகளைப் பார்வையிட புத்தாண்டில் அனுமதி

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் சிறைக்கைதிகளின் குடும்பத்தினர் கைதிகளை பார்வையிட முடியும். எனினும் அவர்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க முடியாது என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் ஆணையாளர் (புனர்வாழ்வு மற்றும் நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கொவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாக சிறை கைதிகளுக்கு அவர்களது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட உணவுகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் இவர்களுக்கான உணவை சிறைச்சாலையின் உணவகத்தில் வழங்கப்பட்டதுடன், அதற்காக கைதிகளின் குடும்பத்தினரால் வாரத்திற்கு 2 ஆயிரம் ரூபா பணத்தை உணவகம் பெற்றுக் கொண்டிருந்தது. இதன்போது சிறைக் கைதிகளை மாதத்திற்கு ஒரு முறையும், சந்தேகத்தின் பேரில் சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளை வாரத்திற்கு ஒருமுறையும் அவர்களது குடும்பத்தினர் பார்வையிடுவதற்கு அனுமதிவழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் சிறைக் கைதிகள் மற்றும் சந்தேகத்தின் பேரில் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளை அவர்களது குடும்பத்தினர் பார்வையிட முடியும்.

இதன்போது கைதிகளை பார்வையிட வருபவர்கள் உரிய சுகாதார சட்டவிதிகளை பின்பற்றி இருப்பதுடன், சிறைச்சாலை சட்டவிதிகளுக்கு அமைவாகவும் வருகைத் தந்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதன்போது குடும்பத்தினரால் கைதிகளுக்கு எவ்வித உணவுப் பொருள்களையும் வழங்க முடியாது. ஆனால் கைதிகளுக்கு தயார் செய்யப்பட்ட உணவுகள், சிற்றுண்டிகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு பொருள்கள் என்பவற்றை பெற்றுக் கொடுப்பதற்காக சிறைச்சாலையின் உணவகத்திற்கு 1,000 ரூபா பணத்தை செலுத்தமுடியும்.

இந்த பணத் தொகையை எதிர்வரும் 14 ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டும். சிறைச்சாலைக்குள் பரவிய கொவிட் - 19 வைரஸ் பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், மீண்டும் வைரஸ் பரவலடைவதை தவிர்க்கும் நோக்கத்திலே சிறைச்சாலைகள் திணைக்களம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

# சமுர்த்தி விற்பனை சந்தை வவுனியாவில் திறந்துவைப்பு



புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்தி விற்பனைச்சந்தை வவுனியா வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு முன்பாகத் திறந்துவைக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் கலந்துகொண்டார்.

புதுவருடத்தை முன்னிட்டு மக்களுக்குத் தேவையான அனைத்து பாரம்பரிய உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஒரே இடத்தில் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளும்படியாக சமுர்த்தி பயனாளர்களால் இந்த விற்பனை பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நிகழ்வில் அதிதிகளாக வேப்பங்குளம் சமுர்த்திவங்கியின் முகாமையாளர் துஸ்யந்திமாலா, மற்றும் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், சமுர்த்தி பயனாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## 29.03.2021 தொடக்கம் 02.04.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலைவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலைவரம்

05.04.2021 தொடக்கம் 09.04.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர் சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய், பப்பாளி, அன்னாசி போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல்நிலை அவதானிக்கப்பட்டது இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

ஒவ்வொரு நாளும் சந்தைக்கு கொண்டு வரப்படும் பொருள்களின் தரம், அளவு போன்றவற்றினால் விலை தீர்மானிக்கப்பட்டு மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.சில பொருள்கள் சில மாவட்டங்களிலிருந்து மட்டும் கொண்டுவரப்படும்.சில பொருட்கள் பல மாவட்டங்களிலிருந்து மட்டும் கொண்டுவரப்படும். குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக விலையில் ஏற்ற இறக்கம் காணப்படும் இந்தக் கிழமை எந்தெந்த பொருள்கள் எந்தெந்த பகுதியிலிருந்து வழங்கலை பூர்த்தி செய்தன அல்லது செய்யவில்லை என பார்ப்போம்.

1. போஞ்சி, நுவரெலியா மற்றும் மாத்தளை பகுதிகள்.
2. தக்காளி, சூரியவெவ.
3. பெரிய வெங்காயம் (இறக்குமதி) துருக்கி பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து
4. பச்சை மிளகாய் - யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பகுதிகள்.
5. தேங்காய் மெல்சிரிபுரா - குருநாகலா, மற்றும் குலியபிட்டிய பகுதிகள்.
6. கரட் - நுவரெலியா - கண்டபோலா மற்றும் ராகலா பகுதிகள்.
7. கோவா - நுவரெலியா மற்றும் புத்தளம் பகுதிகள்
8. கத்திரிக்காய் - கலென்பிந்துநுவேவா பகுதி.
9. தேசி - பிபில் பகுதி.
10. உள்ளூர் சின்ன வெங்காயம் திருகோணமலை யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பகுதிகள்.
11. இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் இந்தியா மற்றும் பாக்கிஸ்தான்
12. பூசணி - கலென்பிந்துநுவேவா
13. அன்னாசி - புத்தளம் பகுதிகள்
14. பப்பாசி - சூரியவெவ பகுதிகள்
15. உருளைக்கிழங்கு - (உள்ளூர்) யாழ்ப்பாணம், வெலிமட

குறிப்பு - எதிர்வரும் புத்தாண்டுக் கொண்டாடங்களால் உள்ளூர் சின்ன வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் போன்ற பொருள்களுக்கான சந்தைக்கேள்வி உயர்ந்துள்ளது.

### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 05.04.2021 | 06.04.2021 | 07.04.2021 | 08.04.2021 | 09.04.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 140 | 110 | 90 | 100 | 110 |
| கேரட் | 130 | 120 | 120 | 100 | 120 |
| கோவா | 90 | 90 | 90 | 95 | 90 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 | 100 |
| கத்திரிக்காய் | 150 | 150 | 160 | 155 | 200 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 | 60 |
| புடலங்காய் | 70 | 70 | 70 | 70 | 70 |
| பச்சை மிளகாய் | 160 | 135 | 145 | 160 | 160 |
| தேசி | 70 | 70 | 70 | 70 | 65 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 220 | 230 | 293 | 283 | 285 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 200 | 210 | 295 | 275 | 280 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 65 | 64 | 61 | 67 | 58 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 130 | 110 | 117 | 117 | 115 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 75 | 70 | 75 | 73 | 70 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 505 | 505 | 505 | 500 | 500 |
| தேங்காய் (சராசரி) | | | | | |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 05.04.2021 | 06.04.2021 | 07.04.2021 | 08.04.2021 | 09.04.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 135 | 145 | 88 | 75 | 95 |
| கேரட் | 125 | 115 | 95 | 125 | 135 |
| கோவா | 68 | 78 | 78 | 48 | 85 |
| தக்காளி | 68 | 55 | 68 | 78 | 68 |
| கத்திரிக்காய் | 155 | 175 | 105 | 205 | 195 |
| பூசணி | 68 | 45 | 45 | 50 | 53 |
| புடலங்காய் | 75 | 75 | 58 | 53 | 68 |
| பச்சை மிளகாய் | 155 | 195 | 245 | 220 | 300 |
| தேசி | 68 | 65 | 65 | 58 | 65 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 245 | 278 | 228 | 248 | 220 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 203 | 298 | 238 | | 308 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | 68 | 73 | 72 | 60 | 73 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | | | | 118 | 108 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 128 | 113 | 128 | | |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | | 503 | 495 | | 520 |
| தேங்காய் (சராசரி) | 59 | 69 | 69 | 64 | 65 |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 05.04.2021 | 06.04.2021 | 07.04.2021 | 08.04.2021 | 09.04.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 155 | 165 | 108 | 95 | 115 |
| கேரட் | 145 | 135 | 116 | 145 | 155 |
| கோவா | 88 | 98 | 98 | 68 | 105 |
| தக்காளி | 88 | 75 | 88 | 98 | 88 |
| கத்திரிக்காய் | 175 | 195 | 125 | 225 | 215 |
| பூசணி | 88 | 65 | 65 | 70 | 73 |
| புடலங்காய் | 95 | 95 | 78 | 73 | 88 |
| பச்சை மிளகாய் | 175 | 215 | 265 | 240 | 320 |
| தேசி | 88 | 85 | 85 | 78 | 85 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 255 | 288 | 238 | 258 | 230 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 213 | 308 | 248 | | 318 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 88 | 83 | 82 | 70 | 93 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 138 | 123 | 138 | 128 | 118 |
| தேங்காய் (சராசரி) | 74 | 74 | 74 | 69 | 70 |

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 05.04.2021 | 06.04.2021 | 07.04.2021 | 08.04.2021 | 09.04.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 68 | 63 | 73 | 80 | 68 |
| பப்பாசி | 68 | 65 | 98 | 83 | 85 |
| அன்னாசி | 105 | 105 | 105 | 115 | 105 |
| ஆப்பிள் (இறக்குமதி) | 59 | 59 | 59 | 59 | 59 |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 55 | 55 | 55 | 55 | 55 |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 05.04.2021 | 06.04.2021 | 07.04.2021 | 08.04.2021 | 09.04.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 85 | 83 | 93 | 100 | 88 |
| பப்பாசி | 85 | 85 | 118 | 103 | 105 |
| அன்னாசி | 125 | 125 | 125 | 135 | 125 |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ப்ரியமதா பயஸ் -



# பாதிக்கப்பட்டோருக்கான கொள்கைகளை எமது சமூகம் வகுத்துள்ளதா?

சமூகம் ஏற்படுத்திய போர், அந்தப் போரின் வடுக்களையும் வலிகளையும் சுமந்து வாழ்கின்ற ஒரு சமூகக்கூட்டத்துக்கு அவர்களுடைய தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும், வாழ்வையும் மையப்படுத்திய ஒரு கொள்கையை உருவாக்கியுள்ளதா என்ற கேள்வியை இப்போது அதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களே எழுப்புகின்றனர். இவர்களில் நானும் ஒருத்தி என்ற வகையில் இந்த கட்டுரையின் பார்வை அமைகிறது.

மாற்றுத் திறனாளிகள் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான தடைகள் அனைத்தையும் நீக்கி இந்த சமுதாயத்தில் அவர்கள் ஏனையோருடன் எல்லா வகையிலும் சமமான பங்குதாரர்களாக முழுப்பங்கேற்று சமுதாயத்தின் வாழ்வியலோடு அவர்களை இணைப்பதே இந்த கட்டுரையின் முதன்மையான கருத்தியல் ஆகும்.

மாற்றுத்திறனாளிகள் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் சமூகத்தின் வழியே, மறுவாழ்வுத் திட்டங்கள் கிடைக்கப்பெற்று பயன்பெறும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே இங்கே முக்கிய கோரிக்கை .

இருந்தபோதும் ஒரு பாதிக்கப்பட்ட பெண் என்ற வகையில் சில ஆதங்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

ஒரு மாற்று வலுவுள்ள இலங்கை பிரஜைக்கு இலங்கை அரசாங்கம் சமூக சேவை திணைக்களத்தினூடாக மாதாந்தம் 5,000 ரூபா பணத்தை வழங்குவதாக அறிகின்றேன். ஆனால் பாதிக்கப்பட்ட பெண்கள், கணவனை இழந்தவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இவற்றுக்கெல்லாம் அரசின் உதவித் திட்டங்கள் என்ன என்பது பெரும்பாலும் கேள்வி மட்டுமே .

அரசு சாரா அமைப்புகள் மூலம் இப்படியானவர்களுக்கு ஏதோ சிறு உதவிகள் கிடைக்கலாம். ஆனால் இந்த மாற்றுத் திறனாளிகளுக்கான கொள்கைகள் தொடர்பில் எந்தத் தீர்மானமோ முடிவோ இல்லாமல் இருப்பது பெரும் கவலையான விடயம்.

இலங்கையைப் பொறுத்தவரை நாடு முழுவதும் மாற்றுத் திறனாளிகள் இருக்கின்றனர். அவர்கள் இயற்கையாப் பிறப்பிலோ அல்லது இடையிட்டோ அந்த உடலநல பாதிப்பை அடைந்திருக்கலாம். அவ்வாறான வர்களின் அடுத்த கட்ட நகர்வுக்குத் திட்டமிடுவதற்கு அவர்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் எங்கேயும் சரியாக இல்லை என்பதே இப்போது இருக்கின்ற மிகப்பெரும் சவாலாக உள்ளது.

30 ஆண்டு காலப் போர் நடந்து ஓய்ந்த ஒரு பூர்வீக மண்ணில், போரின் பின்னரான வடுக்களை பேசிக்கொண்டிருக்கும் எம்மிடம் அந்த போரில் அங்கங்களை இழந்தவர்கள், போரின் பின்னரும் படும் துயரங்களை வரித்துக்கொண்டு அவர்களை இனங்காணவும் உதவவும் முடியாமல் இருப்பதும் அவர்களுக்கான கொள்கைகளை வகுக்கவும் திட்டமிடவும் எந்த அடித்தளமும் இல்லாமல் இருக்கிறோம் என்பது கவலையான விடயமே.



தோராயமாகவும், குத்துமதிப்பாகவும், பாதிக்கப்பட்டவர்கள், அங்கங்களை இழந்தவர்கள், பார்வை இழந்தவர்கள், முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள் என நாம் ஒரு கணக்கு வைத்து பேசிக்கொள்கிறோம். ஆனால் அவர்களின் சரியான தொகைக் கணிப்பைக் கூட எம்மால் பெறமுடியாமல் அல்லது திரட்டமுடியாமல் இருப்பது கவலையானதே .

பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல் கடைசி மாகாண ரீதியிலாவது சரியாக கணிப்பிட்ட தொகை மதிப்பீடு இருக்கவேண்டும். அவர்களின் தேவைகள் குறித்தான மதிப்பீடு இருக்கவேண்டும். வடக்கு, கிழக்கில் கூட பாதிக்கப்பட்டவர்களின் சரியான கணக்கெடுப்பை - சரியான எண்ணிக்கையை - ஒரு ஊடகவியலாளராக என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. எங்கேயும் சரியான எண்ணிக்கை கணக்கெடுப்பு இல்லை என்பது மிகுந்த கவலை அளிக்கும் விடயம்.

நான் பாதிக்கப்பட்டவளாக இருக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுடன் ஒன்றாக மணிக்கணக்கில் இருந்திருக்கிறேன். அவர்களின் தேவைகளை சிரமங்களை கண்கூடாக பார்த்திருக்கிறேன். இதை முக்கிய சில இடங்களில் கொண்டு சேர்த்திருக்கிறேன். ஆனால் அவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்கான எந்த முன்னெடுப்புக்களும் இதுவரை இல்லை என்பது வருத்தமளிக்கும் உண்மை. ஏனைய நாடுகளில் உள்ளது போன்று மாற்றுத்திறனாளிகளுக்கான கொள்கைகள் இலங்கையில் இல்லை என்பது மிக வருந்தத் தக்கவிடயம். இது தொடர்பாக எமது பாதிக்கப்பட்டோர் சார்பாக முன்னாள் வடக்கு மாகாண ஆளுநரிடம் வினவப்பட்டபோது அரசு சார்பாக பாதிக்கப்பட்டோர் சார்பான கொள்கைகள் இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். இது உண்மையில் பாதிக்கப்பட்டோரின் நலனில் இன்னமும் விழப்போகும் அடியாகவே கருதவேண்டி உள்ளது .

கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் போன்றதொரு நிலைமை வேண்டாமே என்பது என் போன்றவர்களின் ஆதங்கமாக இருக்கின்றது .

இலங்கையில் மாவட்டம் ரீதியாக நடைபெறும் அபிவிருத்தி குழுக் கூட்டங்களில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஏதாவது ஆராயப்படுகிறதா?

மாவட்டத்தில் எத்தனை விதவைகள் உள்ளனர் என்கின்ற கணக்கெடுப்பு சரியாக உள்ளதா? முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கான மருத்துவம், கல்வி, உளவியல் தேவைகள் தொடர்பில் யாரும் ஏன் கரிசனை கொள்ளாமல் உள்ளனர்?

நான் இதை வெளிப்படையாகவே சொல்ல நினைக்கிறேன். இந்தத் தரவு சேகரிப்பில் அல்லது கொள்கைகளை வகுப்பதில் ஏன் அசமந்தம்?

போரில் பெற்றோரை இழந்த சிறுவர்கள் எனக்குத் தெரியவே ஏராளமானவர்கள் இருந்தனர். தாயை இழந்தவர்கள், தந்தையை இழந்தவர்கள், இதற்கும் அப்பால் தாய் தந்தை இருவரையும் இழந்தவர்கள் என அநாதரவான சிறுவர்கள் எப்படி சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்? அவர்களும் அவர்களது பெற்றோர்களும் பின்பற்றிய மதம் அல்லது சமய பாரம்பரியம் இப்படி ஏதாவது பின்னணிகளுடன் அவர்களின் வாழ்வியல் பயணிக்க இடம் வழங்கப்படுகின்றதா? அது எப்படி, யார் மூலம்?

இவை பற்றிய தரவு விடயங்கள் யாரிடம் உள்ளன? இந்த அளப்பரிய வேலைத்திட்டத்தை அல்லது சமூகப் பொறுப்புள்ள இந்தவிடயத்தை யார் கண்காணிக்கின்றனர்? இந்தக் கேள்விகளை வருடக்கணக்கில் பொறுத்திருந்து இவர்களிடம் கேட்கலாம் என எண்ணிய அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், சமூக சேவகர்கள் என அனைவரிடமும் வினவி எந்தப் பயனும் எனக்கு இல்லை.

கைவிரிப்புக்களும் முயல்கிறோம் என்கின்ற முன்மொழிவுகளுமே எனக்கு விடையாகின.

ஒரு சமூகத்தின் வலுவானவர்கள் தொடர்பில் இருக்கும் புள்ளிவிவரங்களைக் காட்டிலும் வலுவற்றவர்களின் புள்ளிவிவரங்கள் அவசியமானவை. சமூக நல்நோக்கம் என்பதும் அதுவே .

அரசியல் சாரதா யாரிடமும் இந்த நல்நோக்கம் இல்லை என வைத்துக்கொண்டாலும், அரசியலில் இவர்கள் தொடர்பில் பேசவும் சுட்டிக்காட்டிடவும் யாரும் முன்வராமையும் வருத்தமளிக்கும் விடயமே.

பாதிக்கப்பட்டவர்களின் சரியான கணக்கெடுப்புகள், அவர்களின் தேவைகள் என்பன மிக அவசியமான வகைப்படுத்தல் தேவை. பாதிக்கப்பட்டவர்கள் சார்பான கொள்கைகள் வகுக்கப்பட அவர்களின் தொகை மதிப்பீடு இன்றியமையாதது. இந்த விடயங்களுக்காக நாம் தயாராகவேண்டி உள்ளது.

மாற்றுத்திறனாளி மாணவர்கள் இலவச கட்டாய ஆரம்பக்கல்வி மற்றும் உயர்கல்வியிலிருந்து விடுபடக்கூடாது என்பதனை உறுதி செய்திடுவதற்கான குறிக்கோளில் நாம் முழுக் கவனம் செலுத்தவேண்டும். இக்குறிக்கோளினை அடைந்திடும் விதமாக நாட்டில் இன்னும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான சிறப்புக் கல்விக்கூடங்களை அமைப்பது, சிறப்புக் கல்வியை வழங்குவது தொடர்பில் நாம் கொள்கைகளை வகுக்கவேண்டியுள்ளோம் .

மாற்றுத் திறனாளிகளுக்கு அரச அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் குழுமங்கள் அரச கட்டுப்பாட்டில் செயல்படும் நிறுவனங்களில் இடஒதுக்கீடு அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அதற்கு அவர்களின் சரியான கணக்கெடுப்பு அவசியம். மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய சதவிகித வேலைவாய்ப்பு இட ஒதுக்கீட்டினை அரசதுறைகளில், நிறுவனங்களில் செயல்படுத்த அங்கீகாரம் இருக்க வேண்டும். இதற்காக குழு அமைக்கப்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களைக் கண்டறியும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு அரச துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகள் தமது வாழ்வியலை இடையூறின்றி நகர்த்த அவர்களுக்கு இப்படி வழிகாட்ட வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு, சுயவேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையில் வங்கிக் கடன்களைப் பெற வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

என் சமூகம், என் போன்ற பாதிக்கப்பட்டோருக்கு ஒரு கொள்கையை உருவாக்கி வாழ்வின் வலிகளை பகிர்வதற்கான வழிவகைகளைச் செய்து உலகிற்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்ற வகையில் இந்த கொள்கை உருவாக்கப் பயணத்தில் என் பேனாவும் தொடர்ந்து பயணிக்கும்.

அவர்களையும் சமூகத்தில் ஒருவராக்க முயலுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். மேயர் மணியின் கைது அரசியல் பழிவாங்கல் அல்ல!

## காவல் படையின் சீருடையே காரணமாம் பொலிஸ் பேச்சாளர் றோஹண விளக்கம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தில் அரசியல் பழிவாங்கல் எதுவுமில்லை. யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளை தூய்மையாகப் பேணுவதற்காகக் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களின் சீருடை தொடர்பான குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், அவர் மீதான வழக்கு விசாரணை தொடர்ந்து இடம்பெறும்.

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையினரின் சீருடையை ஒத்தது. இது தமிழீழ விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்யும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.

குறித்த ஊழியர்கள், யாழ். மாநகர மேயரின் தனிப்பட்ட சிபார்சில் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்கான சீருடையும் மேயரின் பணிப்புரையின் பேரிலேயே வழங்கப்பட்டுள்ளது எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக விசாரணைக்காகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் வவுனியாவிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் அவரை மீண்டும் யாழ்ப்பாணம் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

நேற்றிரவு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், அவர் மீது



தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு மீதான விசாரணை தொடர்ந்து இடம்பெறும் - என்றார்.

# தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அரசியல் இலாபம் தேடும் அரசு

## யாழ். மாநகர மேயரின் கைதுக்கு முன்னாள் எம்.பி. சரா கண்டனம்



பெரும்பான்மையின மக்கள் மத்தியில் சரிந்து செல்லும் தனது செல்வாக்கை மீட்பதற்கான கோட்டாபய அரசின் திட்டமே யாழ்ப்பாணம் மாநகர மேயரின் கைது. புலிப் பூச்சாண்டி காட்டி தங்கள் வாக்கு வங்கியைக் கட்டியெழுப்பும் ராஜபக்ஷக்களின் வழமையான உத்தியே இது. தங்கள் அரசியல் நலனுக்காக தமிழ் மக்களை இவ்வாறு அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டை அரசு நிறுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் பொலிஸார் மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஆகியோரினால் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணையின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரின் கைது தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

தமிழர் தரப்பில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் இதுவரை பிரயோகிக்காத ஓர் அதிகாரத்தை - அதை விரிவாக பொருள்கோடல் செய்து வி.மணிவண்ணன் முதற்தடவையாகப் பிரயோகித்துள்ளார். அது சிங்கள தேசத்தை கிலிகொள்ளச் செய்துவிட்டது. அவர்களுக்கு சீருடையோ, அதன் நிறமோ பிரச்சினையல்ல. அதிகாரப் பிரயோகிப்பை ஆட்சியாளர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

அரசுக்குத் தெற்கில் தேய்ந்து செல்லும் தங்கள் வாக்குவங்கியை தூக்கி நிறுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்தினால் அவர்கள் படுதோல்வியைச் சந்திக்க நேரும். அதனால் தங்கள் வழமையான உத்தியை இப்போதும் ஆரம்பித்துவிட்டனர்.

போரில் வென்றோம் என்று கூறி 2010ஆம் ஆண்டு பெரும்பான்மையின வாக்குகளைப் பெற்றனர். ஈஸ்டர் தாக்குதலை முன்னிறுத்தி 2019ஆம் ஆண்டு தேர்தலில் வென்றார்கள். இப்போது தங்கள் வாக்கு வங்கியை அதிகரிக்க மீண்டும் புலிப் பூச்சாண்டியைக் கையில் எடுத்திருக்கிறார்கள்.

மாற்றுக் கருத்தாளர்கள், தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள், ஊடகங்கள் என அனைவரையும் அடக்கி ஒடுக்கவே இப்போதைய அரசு விரும்புகின்றது. ஊடகங்கள் மீதான வழக்குகள், நகர மேயர் கைது என்று இந்த அரசின் அடக்குமுறைப் போக்கு நீள்கின்றது. தமிழ் மக்கள் நிம்மதியாக மூச்சு விடக் கூடாது என்பதுதான் அவர்களின் சிந்தனையாகவுள்ளது.

தங்களின் இந்த நோக்கத்துக்காக, உலக நாடுகளால் மிக மோசமான சட்டம் என்று சொல்லப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு கையில் எடுத்திருக்கின்றது. இந்தச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று பல நாடுகள் வலியுறுத்தும் நிலையில், தற்போதைய அரசு தொடர்ந்தும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை ஒடுக்க முயல்கின்றது. அரசின் இந்தப் போக்கை நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகள் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இப்படியான மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், உயிர்க் கொலைகளைக் கண்டு அடங்கியிருந்து இருந்தால் இப்போது இந்தத் தீவில் தமிழர்கள் என்ற இனமே இருந்திருக்காது. அராஜக அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் அனைவரும் தமிழர்களாக ஒன்றிணைந்து குரல் கொடுப்போம். - என்றுள்ளது.

# சாரதிகள் மீது விசேட கவனம்

சித்திரைப்புத்தாண்டுவாரத்தை முன்னிட்டு, சகல பிரதேசங்களிலும் வாகன சாரதிகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் புத்தாண்டு காலத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் இன்று முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் அதிகம் விபத்துக்கள் ஏற்படுவது வழமை. ஆகவே இவ்வாறு ஏற்படக்கூடிய



விபத்துக்களை தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

# யாழ். நகரில் 5 லட்சம் ரூபா பணம் களவாடல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் வங்கி நடவடிக்கைக்காக வந்த ஒருவரது மோட்டார் சைக்கிளுக்குள் இருந்த 5 இலட்சம் ரூபா பணம் ஆசாமி ஒருவரால் களவாடப்பட்டது.

குறித்த பணத்தை வெகோ ரக மோட்டார் சைக்கிளுக்குள் வைத்துப் பூட்டிவிட்டு வங்கியின் முன்பாக நிறுத்தி விட்டு வங்கி நடவடிக்கையால் வந்தவர் அங்கிருந்து இன்னுமோர் வங்கியில் பணத்தை வைப்பிலிட குறித்த பணத்தைப் பார்வையிட்ட வேளையிலேயே பணம் களவாடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இதையடுத்து பணம் களவாடப்பட்ட இடம் அருகே இருந்த வர்த்தக நிலையத்தில் பொருத்தியிருந்த சி.சி.ரி.வி. கமராவைப் பரிசோதித்த வேளையில் வங்கி முன்னாள் தொலைபேசியில் உரையாடியவாறு நின்ற இளைஞர் ஒருவர் வெகோவில் இருந்த பணத்தை எடுத்துச் செல்வது கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மதமாற்றத் தடையைக் கோரி 'சிவசேனை' உண்ணாவிரதம்



புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பில் இந்து மதத்துக்கு முன்னுரிமை வழங்கக் கோரி, இலங்கையின் 12 மாவட்டங்களில் இன்று காலை முதல் மாலை வரை உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிவசேனை அமைப்பின் ஸ்தாபகர் மறவன்புலவு சச்சிதானந்தன் ஏற்பாட்டில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இந்து மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டால், மதம் மாற்றுபவர்கள் மூலம் சைவ சமயத்திலிருந்து வேறு மதத்துக்கு மக்கள் செல்லமாட்டார்கள் என்றும், பௌத்த மதமும் இந்து மதமும் பாதுகாக்கப்படும் எனவும் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

மேலும், கிழக்கு இலங்கையில் மதமாற்றச் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன எனவும், இலங்கையில் மாடுகள் வெட்டுவதை நிறுத்த வேண்டும் எனவும் சச்சிதானந்தன் இதன்போது கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ப்ரியமதா பயஸ் -

# நாளை என்பது வராமல் முடியாமல் போகலாம்

வாழ்க்கையில்
ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டிய கடினமான பாடங்கள் இவை யாரையும் உதாசீனப்படுத்தாதீர்கள்.

இன்று உதாசீனப்படுத்தப்பட்டவர்கள் நாளை முக்கியமானவர் ஆகலாம்.

வாழ்விழந்த நாள் காட்டியின் தாள் கூட ஆலயத்தில் இறைவனை தேடுவதை விட பிரசாதத்தை எடுத்துச்செல்ல நாட்காட்டி தாள் தேடுவது முக்கியமானதாகிவிடுகிறது.

எதையும் தள்ளி போடாதீர்கள் .நாளை என்பது வராமல்/ முடியாமல் போகலாம்.

தள்ளிப்போடுவதும் தவிர்ப்பதும் பிரச்சினைக்கு தீர்வாகாது. என்றாவது சந்தித்தே ஆக வேண்டும் பிரச்சினையை அயலார் நிலையில் அல்லது எதிராலி நிலையில் ஆய்ந்து எதிர் கொள்ளவேண்டும். பிரச்சினையிலிருந்து ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது. என்றாவது எதிர்கொண்டே ஆக வேண்டும்.

தனித்து வாழ முடியாது எனவே, அனைவருடனும் அனுசரித்து வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

நமது அறிவு , அதிகாரம்,திறமை எல்லாமே ஒரு எல்லைக்கு உட்பட்டுதான் செயல்படுகின்றன.

சாதகமான சூழ்நிலையில் அதிகமாக ஆடக்கூடாது. பாதகமான சூழ்நிலை வரலாம்.

மழை பெய்கிறதே என்று தவளை குதுகலிக்க முடியாது பின்னர் வெயில் காலம் வரும் என்பதை மறந்துவிடக் கூடாது.

கோபத்தில் எல்லாமே நியாயமாக தோன்றலாம். அது பார்வைக் கோளாறு என்பது பின் நாளில் தெரிய வரலாம்.கோவப்படுவதை குறைத்துக் கொள்ள வேண்டும். நிதானமே பிரதான மாக இருக்க வேண்டும்.

பிறருக்கு அறிவுரை. ஆலோசனை கேட்டால் மட்டுமே சொல்ல வேண்டும்.

தேவையில்லாத போது பேசுவதும், தேவையான இடத்தில் மௌனமும் கூடாது

சரி தவறு என்று ஏதுமில்லை.இன்று சரி நாளை தவறலாகலாம் இன்றைய தவறு நாளை சரியாகலாம் நிதானமாக வினையாற்ற வேண்டும்.

செய்வதை விரும்பி செய்தால் நிறைவு கிடைக்கும்.

முதிர்ச்சி என்பது அனுபவம், அனுபவம் சொல்லித் தரும் பாடம் பிழையில்லாதது உங்களின் எதிரியும் தோழனும் நீங்களே வாய்ப்புகளில் உங்களின் முடிவே உங்கள் வாழ்க்கை எதிலும் எப்போதும் மறைந்திருக்கும் சந்தேஷாத்தை தேடுங்கள். காமாலைக் கண்ணுடன் எதையும் பார்க்காதீர்கள் .

நீங்கள் தீர்ப்பு அல்லது தீர்வு சொல்லும் நிலை வரும் போது நியாயத்தின் பால் நில்லுங்கள் வேண்டுதல் வேண்டாமை இன்றி முடிவு அல்லது சாட்சியாகுங்கள் எதையும் உணர்வு பூர்வ மாக சிந்திக்காமல் அறிவு பூர்வமான சிந்தனையின் முடிவில் நில்லுங்கள்.

நீங்கள் நீங்களாகவே இருங்கள் ஒருபோதும் முகமூடி அணிந்து நடிக்காதீர்கள்.என்றாவது ஒருநாள் முகத்திரை கிழிந்து .உண்மை சொருபம் வெளிப்படலாம் என்பதை உணருங்கள்.

எவரையும் தேவைக்காக பயன்படுத்திக் கொள்வதும் தேவைக்குப்பின் அலட்சியப் படுத்துவ தும் கூடாது. ஆம் என்று சொல்லவேண்டிய இடத்தில் இல்லை என்றோ இல்லை என்று சொல்ல வேண்டிய இடத்தில் ஆம் என்றும் சொல்லாதீர்கள்.

உங்களால் பின்பற்ற முடியாதவற்றை மற்றவர்களிடம் பின்பற்ற சொல்லாதீர்கள்.

யாரையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று மிகையாகவோ குறைவாக பேசாதீர்கள் யாரையும் ஏளனம் செய்யாதீர்கள்.

ஒருவர் இல்லாத நேரத்தில் அவரைப் பற்றிய விமர்சனத்தில் ஈடுபடாதீர்கள். ஒருபோதும் புறம் பேசாதீர்கள். நல்லவற்றை பாராட்டுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதை பிறரை வைத்து செய்ய முயற்சிக்காதீர்கள்.

# கடினமான பாடங்கள்

விபத்து, வறுமை, வியாதி போன்ற திடீர் பிரச்சினைகள் உள்ளது தான் வாழ்க்கை. ஆகையால் எதன் மீதும் அதிக பிடிப்பு இல்லாமல் இருக்க முயல வேண்டும்.

ஒருவர் சிரிக்க சிரிக்க நம் முன் நடிக்கலாம். நாம் நகர்ந்ததும் அவதூறாக எல்லா இடத்திலும் பொய் சொல்லலாம். அதற்கு பதில் கடுஞ் சொற்கனால் நேரே உண்மையை பேசுபவர்கள் சிலர் நல்லவர்கள். ஏதோ விதத்தில் நம் முன்னேற்றத்திற்கு தான் உதவுகிறார்கள்.

பணம் பாதாளம் வரை பாயும் என்பதும் உண்மை. மிக பெரிய மன உடல் உள சோர்வுக



ளுக்கு மருந்து என்பதும் உண்மை.

குடும்பத்தினருடன்(அல்லது உண்மை நட்புடன்) எப்பொழுதாவது மனம் விட்டு பேசும் ஆறுதல் அதாவது எப்போதாவது மனம் திறந்து அங்கே பேசுவதும் முக்கியம் .நிஜங்கள் தேடிதான் வாழ்க்கை.

நாம் எவ்வளவு நன்மை செய்தாலும் நன்றி என்ற ஒன்றை எதிர்பார்க்கக்கூடாது. நன்றி என்ற உணர்வு அதனை வெளிப்படுத்துபவர்கள் மிக மிக அரிதானவர்கள். செய்வதை எப்போதும் செய்ய வேண்டும். நன்றி எப்போதாவது யாராவது சொன்னால் சந்தோஷமாக பெற வேண்டும்.

அவரவர் தன் துயரங்களை மிகைப்படுத்தி நினைப்பதும் தனக்கு கிடைத்த இன்பங்களை மிக சொற்பம் என்று நினைப்பதும் பெரும்பாலான உலக இயல்பு. இதற்கு மாற்றாக உங்கள் குணம் இருந்தால் பொறாமை / வெறுப்பு/ ஏளனம்/ கிண்டல் / எடை போடப்படுதல் இப்படி ஏதாவது ஒன்றுக்கு கண்டிப்பாக ஆளாக நேரிடும். அதனை கடந்து செல்ல வேண்டும்.

பணம், குடும்பம், வேலை, அந்தஸ்து, கல்வி, வெற்றி, தோல்வி – எதுவுமே கூட வராது. வேறு ஏதோ ஒன்று வரும் இல்லை? அதைப் பற்றி சிந்தை நோக்கு வேண்டும்.

முதலும், மத்திய வாழ்க்கையிலும், இறுதியிலும் கூட வருபவர்கள் சகோதரர் என்னும் உறவு. அவர்கள் நம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் தருகிறார்கள். மிகவும் பேசப்படாத உறவுகளில் ஒன்று தான் ஆனால் பங்கு அதிகம்

வெற்றியையும் பணத்தையும் உறவையும் கொண்டாடுங்கள்.

ஆனால் உறவின்மை, தோல்வி, வறுமை இதனால் திண்டாட வேண்டாம். இரண்டுமே கண்டிப்பாக மாறி மாறி வரும், விஞ்ஞானம் , அறிவியல், கர்மா ஜோதிடம், எல்லாவற்றாலும். வாழ்க்கை முழுக்க கஷ்டப்பட்டேன்..இல்லை ஒரே கொண்டாட்டம் தான் என்று யாராவது சொன்னால்? நம்பகத்தன்மையை யோசிக்கவும். கண்டிப்பாக ஒன்று இல்லை என்றால் இன்னொன்று உண்டு. ஆகவே கிடைத்ததற்கு இறைவனை எண்ணி நன்றியுடன் இருப்பது நிம்மதி தரும்.

# வருவதை எதிர் கொள்ளுங்கள்!!!



வருவது வரட்டும் போவது போகட்டும்.எல்லாம் நன்மைக்கே என்று நினையுங்கள். வருவதை எதிர் கொள்ளுங்கள் இது ஒரு வழி.

மனதை மகிழ்ச்சியாக வைத்து கொள்ள காலை மாலை இறை வழிபாடு தேவை. மனதில் இருக்கும் பாரத்தை இறைவனிடம் இறக்கிவையுங்கள்.

ஒருவர்க்கு ஒருவர் விட்டுக் கொடுத்து பழுகுங்கள்.தவறு செய்தால் மன்னிப்பு கேளுங்கள் மகிழ்ச்சி பொங்கும்.

# பெரும்பாலான மனிதர்களுக்கு இருக்கும் நிலைமை இதுதான்



அதாவது நாம் மிகவும் நல்லவர்கள் என்று நாமே கற்பனை செய்து கொண்டு வாழ்க்கையை நடத்துவது. இது மனிதனின் மிகப்பெரிய முட்டாள்த்தனம்.

பூனை கண்களை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விட்டது என்று எண்ணிக்கொள்ளுமாம். அதைப் போலத்தான் முக்கால் வாசி மனிதர்கள் இந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் எவ்வளவு கேவலமானவர்கள் என்று நம்மை விட பிறருக்குத்தான் அதிகம் தெரியும். நம் முதுகுக்கு பின்னால் இருக்கும் அழுக்கு நமக்கு தெரியாது. நம் கண்களுக்கு தெரியாமல் எத்தனையோ மனிதர்கள் நம்மால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். அந்த வலியும் வேதனையும் நமக்கு கடைசிவரை தெரியப்போவதில்லை.

பெரும்பாலான மனிதர்கள் நாம் நல்லவர்கள் என்ற மாய விம்பத்தில் வாழ்கிறார்கள். நாம் நல்லவர்கள் என்ற கர்வம் பல முட்டாள்தனங்களை செய்ய வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியவர் இராயப்பு யோசப்

## இரங்கல் செய்தியில் யாழ் ஆயர் உருக்கம்

இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற இறைவன் அருளுவார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இலங்கையின் எல்லாக் கத்தோலிக்க ஆயர்களும் இணைந்து நின்று மேதகு கலாநிதி இராயப்பு ஜோசெப் ஆண்டகையின் பூதவுடலை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் அடக்கம் செய்தோம் என யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தம் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கும்போது –





இயல்பாகவே துன்பப்படுவோர், துயரப்படுவோர், வேதனைப்படுவோர் யாரின் உதவியும் இன்றி இருப்போர், வறியோர் மட்டில் கரிசனை கொண்ட இவர் தனது குருத்துவப் பணியை யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறைமாவட்டங்களில் ஆரம்பித்த பின்னர் திருச்சபை சட்டத்துறையில் உரோமையில் கலாநிதிப்பட்டம் பெற்று தன் பணிக்கு வலுச் சேர்த்துக் கொண்டார்.

மன்னார் ஆயராகப் பணியேற்ற பின்னர் தமிழ் மக்களுக்கு எதிரான எல்லா அடக்குமுறைகளுக்கும் அநீதியான செயற்பாடுகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் துணிவாக குரல் கொடுக்கின்ற இவரின் பணி முழு வடிவம் பெற்றது. முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகள், சிறையில் வாடுவோர், காணாமற் போனோர், வேலையற்றோர், போரால் பாதிக்கப்பட்டோர் அனைவருக்காகவும் துணிந்து நின்று தம் உயிரைத் துச்சமென மதித்து குரல் கொடுத்தார். பயங்கரவாதி என்றும் புலிகளின் ஆதரவாளர் என்றும் அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடப்பட்ட போதும் அவர் தமது இறை நம்பிக்கையையும் ஆயர்ப் பணியையும் ஆயர்ப் பதவியையும் பணயம் வைத்தும் முற்று முழுதாகப் பயன் படுத்தியும், தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படும் ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், அதிகாரத்தில் இருப்போர் ஆகியோருக்கு எதிராகத் துணிந்து நின்று குரல் எழுப்பினார். – என்றார்.

# கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநராக மைக்கல் ராஜேந்திரம் அடிகளார் நியமனம்



இலங்கைக் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநராகக் காலி மறைமாவட்டத்தைச் சேர்ந்த மைக்கல் ராஜேந்திரம் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 06 ஆண்டுகளாக மேற்படி இலங்கைக் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர்ப் பொறுப்பை ஆற்றிய கண்டி மறைமாவட்டத்தைச் சேர்ந்த றோய் கிளரன்ஸ் அடிகளாரிடம் இருந்து மேற்படி இலங்கைக் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர்ப் பொறுப்பை இவர் பெற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலி மறைமாவட்டத்தைச் சேர்ந்த மைக்கல் ராஜேந்திரம் அடிகளார் 'தாரகை' என்ற பெயரில் காலி மறைமாவட்டத்திற்கான தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகை ஒன்றைப் பல சிரமங்கள் மத்தியில் தனித்து நின்று நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அடிகளார் தமது இந்தப் பணியோடு காலி மறைமாவட்டத்திற்கான 'தாரகை' என்ற காலி மறைமாவட்டத் தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகைத் திருப்பவும் தொடக்கி நடத்துவது சிறப்பாகும். அது அவரின் புதிய பணிக்கும் துணை புரியும் என அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். இலங்கைக் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர்ப் பொறுப்பைச் சிறப்புடன் ஆற்றுங்கள் என மைக்கல் ராஜேந்திரம் அடிகளாருக்குக் காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# செபமாலைதாசர் சபையினர் மன்னார் மறைமாவட்டத்தில் கால் பதிப்பதற்கு வழி வகுத்தவர் ஆயர் இராயப்பு யோசேப்

## நன்றி தெரிவிக்கிறார் ஏ.எம்.ஸ்.ஸ்ரீபன் அடிகளார்

தோலகட்டி செபமாலைதாசர் – செபமாலைக் கன்னியர் துறவு சபையினருக்கு மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆற்றிய அனைத்துப் பணிகளுக்கும் சபையின் பெயரால் நன்றி தெரிவிக்கிறார் செபமாலைதாசர் சபையின் மூத்த குருவும் 'கிறிஸ்தவ செய்தி இதழ்' ஆசிரியருமான ஏ.எம்.ஸ் ஸ்ரீபன் அடிகளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

அந்த நாள்களில் தோலகட்டி செபமாலைதாசர் செபமாலைக் கன்னியர் துறவு சபையின் நிறுவினர் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரின் புனிதப்பட்ட ஆய்வுகள் யாழ் மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அப்போது (குருவாக) இராயப்பு ஜோசப் அடிகளார் ஆயர் தியோகுப்பிள்ளையின் பதிலாளியாக அக்குழுவில் நியமிக்கப்பட்டார். இராயப்பு ஜோசப் அடிகளாரும் இந்த நியமனத்தை பெரும் மகிழ்வோடு ஏற்று தனது பணியை ஆரம்பித்தார். அவர் தோமஸ் அடிகளாரை அறிந்த ஆயர்கள், குருக்கள், துறவியர், மக்கள் எனப் பலரையும் இலங்கையிலும் இந்தியாவிலும் நேரடியாக சந்தித்து தோமஸ் அடிகளாரின் வாழ்வு, புண்ணியங்களைப் பற்றி அவர்களின் சாட்சியங்களை கேட்டறிந்து அவற்றைத் தொகுத்து ஆயர் மேதகு கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் கையளித்தார்.

இந்த புனிதப்பட்ட மறைமாவட்ட ஆய்வின் பொறுப்பாளராக நான் (ஏ.எம்.ஸ். ஸ்ரீபன் அடிகளார், செபமாலைதாசர் சபை) செயல்பட்டமையால் என்னுடனும் இவர்களைப் பற்றி அடிக்கடி நிறைய விடயங்களைப் பேசி வந்துள்ளார். இக் காலப்பகுதியில் அவர் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுவரை இந்தப்பணியை முழு அர்ப்பணிப்போடு செயல்படுத்திய அவர் மன்னார் ஆயராக பணியேற்ற பிற்பாடும் நாம் அவரை மன்னார் ஆயர் இல்லத்தில் அணுகியபோது மன்னார் மறைமாவட்டத்திலும் தோமஸ் அடிகளாரின் புனிதப்பட்ட ஆய்வுகள் நல்ல முறையில் நடைபெற எல்லா ஒழுங்குகளையும் செய்திருந்தார்.





தொடர்ந்தும் இந்த புனிதப்பட்ட ஆய்வுகளைப் பற்றி அடிக்கடி விசாரித்து வந்தார். தோமஸ் அடிகள் விரைவில் புனிதராக வரவேண்டும் என்றும் ஆசித்திருந்தார். ஆயர் அவர்கள் உயிருடன் இருக்கும் போதே பி.ஏ.தோமஸ் அ.ம.தி. அடிகளாருக்குப் புனிதர்ப்பட்டம் கிடைக்காது போனாலும் ஆயர் அவர்கள் தொடர்ந்தும் புனிதர்ப் பட்டத்திற்காக இறைவரம் வேண்டுவார் என நம்புகிறேன்.

அந்த போர்க் காலத்தில் யாழ்ப்பாணம் பகுதிகளிலிருந்து அனைத்து மக்களும் 1995ஆம் ஆண்டு இடம்பெயர வேண்டிய கொடுமையான சூழ்நிலை ஏற்பட்டது. அவ்வேளையில் எமது தோலகட்டி மடம் ஏற்கனவே இலங்கை படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தது. மேலும் அங்கு எமது துறவியாகிய அருட்சகோதரர் வென்செஸ்லாஸ் அவர்கள் 20 ஜுன் 1986இல் தோலகட்டி ஆச்சிரம வளாகத்திலேயே துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். எனவே படையினரின் ஆக்கிரமிப்புக்குப் பின் எல்லாத் துறவிகளும் யாழ் அருள் ஆச்சிரமத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

1995இல் இடம் பெயர்வின்போது எம்முடன் படித்துக் கொண்டிருந்த குரு மாணவருடன் கிளாலி மார்க்கமாக மடு மாதா திருத்தலத்திற்கு வந்து சேர்ந்தோம். அப்போது ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் எமக்கு மடுத்திருத்தலத்தில் ஒரு வீடு கொடுத்து அங்கு எம்மை தங்க வைத்தார். அதன்பின் நாம் வேறு ஒரு இடத்தில் குடியேறி எமது செபமாலைதாசர் செபப்பணிகளை ஆற்றப் பணித்தார். மேலும் அதற்கான இடத்தை தனது மறைமாவட்ட சிற்றாலயங்கள் அமைந்துள்ள ஏதாவது ஒரு இடத்தை எடுக்க முடியுமா என்றும் கேட்டிருந்தார். நாம் அந்த இடங்களை பார்வையிட்ட போதும் போர்க் கால சூழ்நிலையில் வாழ்வதற்கு உகந்ததாக இருக்கவில்லை.

அதை ஆயரிடம் தெரிவித்தபோது வவுனியா பகுதியில் தனது மன்னார் மறைமாவட்டத்துக்குரிய ஏதாவது ஒரு இடத்தை பார்வையிடச் சொன்னார். அதன்பின் அங்கு கைவிடப்பட்ட நிலையில் இருந்த ஒரு சிறுவர் இல்லத்தைத் திருத்தி அதில் இருந்து கொண்டு எமக்கு ஏற்ற ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்குமாறு கூறினார். அதன்படி வவுனியா சிறுவர் இல்லத்தில் மாணவருடன் ஆரம்பித்த போது ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களே அதை புனித சூசையப்பர் திருநாளாகிய 19 மார்ச் 1996ஆம் ஆண்டில் ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்தார்.

அங்கிருந்து கொண்டு பல இடங்களைப் பார்வையிட்டு இறுதியாக வவுனியாவில் மதவுவைத்தகுளத்தில் ஓர் இடத்தைத் தேர்ந்து நாம் வாங்கினோம். அதைப் பார்வையிட்ட ஆயர் மகிழ்ச்சி அடைந்தார். இங்கு பெறப்பட்ட காணிக்குள் துறவிகள் மற்றும் மாணவர்கள் வாழ்வதற்கான ஒரு மடம் கட்டப்பட்டது. புனித பாத்திமா அன்னையின் கெபியும் அமைக்கப்பட்டது. ஓர் ஆலயமும் புதிதாக உருவாக்கப்பட்டது. இவை எல்லாவற்றின் அடிக்கல் நடுதல், ஆசீர்வதித்து திறந்து வைத்தல் போன்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் ஆயர் ஜோசப் அவர்கள் வருகை தந்து மகிழ்வோடு அனைத்தையும் நிகழ்த்தி வைத்தார். குறிப்பாக புனித பாத்திமா அன்னையின் கெபியில் ஆசீர்வதித்து முதல் செபமாலையையும் ஆயர் அவர்களே ஆரம்பித்து நிகழ்த்தி வைத்தார்.

மறைந்த ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை எமக்கு செய்த எல்லா உதவிகளுக்கும் தோலகட்டி செபமாலைதாசர் – செபமாலைக் கன்னியர் துறவு சபையின் சிறப்பான நன்றி கூறுவதோடு அவரது ஆன்மா இறைவனில் நிறைவு பெற எங்கள் செபங்களில் வேண்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 077 477 9443, 076 141 9299

நிமலேந்திர தியேட்டர் சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் பிளாட் கடை. (மேல் மாடி இல்லை)
தொடர்புகளுக்கு - 077 857 8528

மருந்து கடை, புடைவை கடை, பான்சி கடை பல்பொருள் வாணிபம் செய்வதற்கு ஏற்ற கடை நாச்சிமார் கோவில் வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியில் உள்ளது.
தொடர்புகளுக்கு - 077 857 8528

## கடை விற்பனை

யாழ். ஆஸ்பத்திரி வீதியும், யாழ் புகையிரத வீதிச் சந்திக்கும் நாற்சந்தியில் 30.5 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட 4 கடைகள் 5032.5 சதுர, அடியில் 3 மாடி கட்டிடம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 0033770012099

யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி வீதி முன்பாக 10, 000 sq ft கொண்ட மூன்று மாடி கட்ட தொகுதி வாடகைக்கு, வாகன தரிப்பிட வசதி உடையது.வங்கிகள், சுப்பர் மார்க்கெட், அலுவலகத்திற்கு உகந்தது.
தொடர்புகளுக்கு - 076 361 4997

## காணி தேவை

யாழ் நகரில் இருந்து மருதனார் மடத்திற்கு இடைப்பட்டதாக K.K.S. வீதியில் வீதியோரத்தை அண்மித்ததாக காணி தேவை.
தொடர்புகளுக்கு - 077 951 4699

## மணமகன் தேவை

பி.தி. 25.10.1985, இந்து P, நட் - பூரட்டாதி 2, பாவம் - 44, செவ் - 1 இல், கல்வி - MBBS, தொழில் - டாக்டர்.
தொடர்புகளுக்கு - 077 857 8528

பி.தி. 30.04.1984, இந்து V ஆண், நட் - அச்சுவினி, செவ் - 5இல், கி.பா - 27 படித்த தொழில் ஸ்தாபனம் உரிய மணமகனுக்கு மணமகள் காரைநகர்..

பி.தி. 06.07.1993, இந்து V ஆண், நட் - சுவாதி, செவ் - 5 இல், தகைமை - AL, தொழில் - Company வேலை மணமகன்.

பி.தி 04.09.1992, நட் - கேட்டை 4, செவ் - 2, கி.பா - 15, தகைமை - AL தொழில் - Company வேலை மணமகன். AL படித்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு - 077 197 1667

## மணமகள் தேவை

பி.தி - 06.06.1994, இந்து P, நட் - பரணி, பாவம் - 73, செவ் - 7 இல், கல்வி - பட்டதாரி
தொடர்புகளுக்கு - 077 857 8528

பி.தி - 24.09.1989, இந்து V, நட் - புனர்பூசம் 3, செவ் - 12 இல், கல்வி - Chatted Accountant, தொழில் - Accountant Company, எதிர்பார்ப்பு - Australia PR மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு - 077 857 8528

## கல்வி

மிருதங்கம், வயலின், கிட்டார், ஓகன், வாய்ப்பாட்டு கற்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு - 077 022 9400

சகல வகையான இசை வகுப்புகளும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு - 021 222 4242
077 556 3030

## பழுது பார்த்து கொடுக்கப்படும்

சகல வகையான குளிர்சாதனப் பெட்டிகளும் பழுது பார்த்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 654 8613

## தாயகம் MATRIMONY

**உலகலாவிய தமிழர்களுக்கான இணையவழி வரன் தேடும் சேவை.**
**www.thayagammatrimony.com**
**தொடர்புகளுக்கு - 0773573406**

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர், பராமரிப்பாளர் தேவை.
தொடர்புகளுக்கு:- 076 740 3814

கணினி திருத்துவதற்கும் வேலை பழக விரும்பும் ஆண், பெண், இரு பாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு:- 077 914 7472

தினசரி பத்திரிகைகள் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 292 6316

சி.சி.ரீ.வி. கமரா பொருத்துதல், பராமரித்தல் மற்றும் முதற்தர கமராக்களை வாங்குவதற்கு அணுகவும்.
தொடர்புகளுக்கு - 077 473 6057

சுன்னாகத்தில் இயங்கும் உணவகத்திற்கு சமையல் தெரிந்தோர், உதவியாளர், சுத்திகரிப்பாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 077 652 9583

யாழில் எமது வீட்டில் குழந்தையை பராமரித்துக் கொள்வதற்கு பெண் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு - 072 359 5410

கிளிநொச்சியில் உள்ள ரைஸ் மில் நிறுவனத்திற்கு முன் அனுபவம் உள்ள மெசின் ஒப்பரேட்டர் 10 வீல் லொறி டிரைவர், முகாமையாளர், சமையல்காரர், காவலாளி தேவை. தங்குமிடம், உணவு இலவசம்.
தொடர்புகளுக்கு - 077 772 2305

## சேவைகள்

உங்கள் அடகு நகைகளை மீட்க உதவுவதோடு பழைய நகைகள் கூடிய விலையில் வாங்கப்படும்.
தொடர்புகளுக்கு - 021 222 2552

பெண்களுக்கான திருமண வைபவ சாறி பிளவுஸ்களுக்கு ஆரிவேர்க் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 077 332 1937, 076 610 9770

பழைய நகைகள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும், தகுந்த ஆவணங்களுடன் வருகை தரவும்.
தொடர்புகளுக்கு:- 076 804 6048
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி

Laptop உதிரிப்பாகங்களை பெற்றுகொள்ளலாம் பாவித்த Laptop வாங்கப்படும், விற்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 914 7472

அனைத்து விதமான இசைக்கருவிகளையும் மிகக்குறைந்த விலையில் வாங்க மற்றும் பழுது பார்க்க.
தொடர்புகளுக்கு - 077 556 3030

## மரக் கன்றுகள் விற்பனைக்கு

11/2 மாத மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு - 021 492 7778

தரமான இஞ்சி கன்றுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 021 492 7778

## வாகனம் விற்பனைக்கு

பஜாஜ் புஸ்ரோக் 2015 AB நம்பர்.
பஜாஜ் 2 ஸ்ரோக் 2010 Q நம்பர்
ரி.வி.எஸ் AA நம்பர் 2014
ரி.வி.எஸ் கிங் 2013

ரி.வி.எஸ் வேகோ - 2018
கொண்டா டியோ - 2016
கொண்டா ஏவியேட்டர் - 2019
விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம்.
077 625 2537

## வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வியாபார மூளையில் காணியும் நல்ல நிலையிலுள்ள மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.

முள்ளியவளை குமுழமுனையில் 2 ஏக்கர் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

வவுனியா கோயில் குளம் பகுதியில் 11/2 பரப்பு காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு.

அச்சுவேலி மேற்கு முட்டியபுலம் வசாவிளானில் உள்ள 86 பரப்பு தோட்டக்காணி (நல்ல சிவந்த மண்) விற்பனைக்கு உண்டு.

மந்திகை வைத்தியசாலையின் பிரதான வீதியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் 6 பரப்பு காணி உண்டு.

இயக்கச்சியில் A9 வீதியிலிருந்து வெற்றிலைக் கேணிக்கு பிரதான வீதியில் 3 பக்க பாதையுடன் 10 ஏக்கர் காணி உண்டு.

தொடர்புகளுக்கு - 077 857 8528

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் 11/2 பரப்பு காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு - 077 432 2836

கொடிகாமத்தில் காணி விற்பனைக்கு 8 பரப்பு 3 குழி.

வல்வெட்டித்துறையில் வீடு விற்பனைக்கு 15.83 குழி.

நுணாவிலில் காணி விற்பனைக்கு 12 பரப்பு.

உடுவிலில் வீடு விற்பனைக்கு 2 பரப்பு.

மட்டுவிலில் காணி விற்பனைக்கு 5 பரப்பு.

நெடுங்குளத்தில் வீடு விற்பனைக்கு 1 பரப்பு 4.5 குழி
**தொடர்புகளுக்கு - 077 566 0000**

வெள்ளவத்தையில் கடற்பரை ஓரமாக 6.2 பேர்ச் காணி விற்பனைக்கு, மூன்று அடி பாதை மட்டும் ஒரு பேர்ச் 40 லட்சம்.

தெகிவளையில் அடுக்கு மாடி குடியிருப்பில் 1,350 sq ft கொண்ட வீடு விற்பனைக்கு 3 படுக்கை அறையும், 2 குளியல் அறையும் வாகன தரிப்பிட வசதியும் கொண்டது. 250 லட்சம்.

பூவரசன் குளம் மன்னார் வீதியில் 20 ஏக்கர் மேட்டு நெற்காணி விற்பனைக்கு ஒரு ஏக்கர் 3.5 லட்சம்.

தெகிவளையில் கடற்பரைக்கு அண்மையாக 10 பேர்ச் வீடு விற்பனைக்கு உண்டு. 55 லட்சம்.

தெல்லிப்பளையில் 2 1/2 பரப்பு காணி 3 ஆவது பிளாக் மெயின் வீதியில் விற்பனைக்கு உண்டு. 18 லட்சம்.

13/4 பரப்பு காணி கண்டி வீதி A9 மாம்பழம் சந்திக்கு 200 மீற்றர் தூரத்தில் அகலமான வீதிக்கு முகப்பாக விற்பனைக்கு மொத்தமாக 59 லட்சம்.

மறவன்புலவில் 2 1/2 வயல் காணி விற்பனைக்கு உள்ளது. (அருகே குளம் உள்ளது) மொத்தமாக 25 லட்சம்.

பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆடியபாதம் வீதிக்கு 50 மீற்றர் தொலைவில் 3 பரப்பு காணி விற்பனைக்கு இரண்டாக பிரிக்க கூடியது. ஒரு பரப்பு 100 லட்சம்.

இருபாலையில் 200 மீற்றர் தொலைவில் பருத்தித்துறை வீதிக்கு அமைவாக வீடு விற்பனைக்கு மொத்தமாக 130 லட்சம்.

A9 வீதிக்கு அண்மையாக 10.5 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 10 லட்சம் (மொத்தமாக 100 லட்சம்)

1 பரப்பு 3 குழி புத்தம் புதிய வீடு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் கொக்குவில் பகுதியில் விற்பனைக்கு 3 அறைகளுடன் சுற்று மதிலுடன் கூடிய வீடு. 145 லட்சம்.

கொக்குவில் ஆடியபாதம் வீதியிலிருந்து 50 மீற்றல் தொலைவில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 85 லட்சம்.

தனங்கிளப்பில் 12 ஏக்கர் மேட்டுக் காணி விற்பனைக்கு பிரதான வீதிக்கு இரண்டாம் காணி ஒரு ஏக்கர் 12 லட்சம்.

ஈச்ச மோட்டையில் பழைய வீட்டுடன் 4 பரப்பு காணி விற்பனைக்கு, இரண்டாக பிரிக்கலாம் மொத்தமாக 140 லட்சம்.

ஆவரங்காலில் தென்னை வைக்கக் கூடிய 28 பரப்பு வயற்காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 1 லட்சம்.

கோவில் வீதியில் 40 பேர்ச் காணி விற்பனைக்கு ஒரு பேர்ச் 40 லட்சம்.

கோவில் வீதி முகப்பாக 21 பெர்ச் காணி விற்பனைக்கு ஒரு பேர்ச் 40 லட்சம்.

தாவடியில் 1 1/4 பரப்பு புத்தம் புதிய வீடு விற்பனைக்கு 3 அறைகள் இணைந்த குளியல் அறை குழாய் கிணறு நல்ல தண்ணீர் சுற்று மதில் சில வேலைகள் மீதமுள்ளது. கே.கே.எஸ் வீதிக்கு 600 மீற்றர் தொலைவில் 100 லட்சம்.
**தொடர்புகளுக்கு 076 361 4997**

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 16 பரப்பு காணியும் பருத்தித்துறை பிரதான வீதியில் 40 மீற்றர் நடை தூரத்தில் காணியும் உள்ளது.

இருபாலை கிழக்கில் 4 3/4 பரப்பு காணி உண்டு.

கே.கே.எஸ் வீதி சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் 6 பரப்பு காணி உண்டு.

பளையில் தென்னந்தோப்புடன், வீடு, நீர்ப்பாசனம் மின்சார வசதிகளுடன் கூடிய 40 ஏக்கர் காணி உண்டு.

யாழ். பாடி வீதியில் சகல வசதிகளுடன் வீட்டுடன் 2 1/4 பரப்பு காணி உள்ளது. (முக்கியமான இடங்கள் அருகாமை)
**தொடர்புகளுக்கு - 077 857 8528**

## வீடு வாடகைக்கு தேவை

பருத்தித்துறை வீதியில் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு. யாழ். நகருக்கு அண்மையில், வாகன தரப்பிட வசதி உண்டு. அலுவலகங்களுக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு - 076 361 4997

## குத்தகைக்கு

திருகோணமலை பிரதான வீதியில் 1.5 பரப்பு காணி குத்தகைக்கு உள்ளது.

நல்லூர் கோவில் வீதியின் முகப்பாக 3.5 பரப்பு காணி குத்தகைக்கு உள்ளது விலை பேசி தீர்மானிக்க முடியும்.
தொடர்புகளுக்கு - 076 361 4997

பண்ணை ஒன்று ஆரம்பித்து நடத்த அல்லது உளுந்து சாடுபடி செய்ய மட்டுவிலில் தோட்டக்காணி குத்தகைக்கு காணிகள் 60 பரப்பு, 40 பரப்பு.
தொடர்புகளுக்கு - 076 361 4997

## சொத்துக்கள் வாங்க விற்க

- ✔ கடை ✔ கட்டிடங்கள்
- ✔ வயல் ✔ தோட்டம்
- ✔ வீடு ✔ காணி
- ✔ தென்னந்தோட்டம்

விற்க.. வாங்க...
வாடகைக்கு... குத்தகைக்கு...
**www.dreamhouse.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# உள்நாட்டு, சர்வதேச ஒத்துழைப்பு இல்லாமல் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நடத்த முடியாது

## கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்நாட்டு சர்வதேச ஒத்துழைப்பு இல்லாமல் நடத்த முடியாது. அத்துடன் தாக்குதலுக்கு முன்னர் நாட்டில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தாமல் அதனைப் புலிகளின் மீது சுமத்தி பாதுகாப்புத் துறை வேடிக்கை பார்த்துள்ளார்கள் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான ஆறாவதுநாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஏப்ரல் தாக்குதல் சாதாரணமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாக இருக்க முடியாது. அதற்கு உள்நாட்டு சர்வதேச ஒத்துழைப்புகள் இருந்திருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் இதனை நடத்தமுடியாது.

அதேபோன்று ஏப்ரல் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் பல தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. அந்த சம்பவங்கள் அனைத்தையும் விடுதலைப் புலிகளின் மீது சுமத்தி பாதுகாப்புப் படையினர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

வடக்கில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்பு ஏப்ரல் தாக்குதலுக்கான பரீட்சார்த்த நடவடிக்கையாகவும் இருந்திருக்கலாம். இந்தச் சம்வவங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு என்ன நடந்தன.

மேலும் ஏப்ரல் தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரான் உட்பட குண்டுதாரிகளில் அதிகமானவர்கள் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக சம்பளம் பெற்றுக்கொண்டவர்கள் என்பது தற்போது வெளிப்படையாகி இருக்கின்றது. அதனால் அப்போதைய அரசாங்கத்தை மாற்றுவதற்கான சந்தர்ப்பமாகவும் இந்தத் தாக்குதலைப் பயன்படுத்தி இருக்கலாம்.

அத்துடன் ஏப்ரல் தாக்குதலின்போது 8 குண்டுகளே வெடிக்கப்பட்டன. அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்க கர்தினால் மெல்கம் ரஞ்சித் குரல் கொடுத்து வருகின்றார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். அதேபோன்று வடக்கு கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தில் ஆயிரக்கணக்கான குண்டுகள் வெடிக்கப்பட்டன. தேவாலயங்கள் தாக்கப்பட்டன. அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கவும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் குரல் கொடுக்கவேண்டும்.

மேலும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு 2009 இல் முடிவடையும்வரை இந்த நாட்டில் முஸ்லிம் மக்கள் ஆட்சியில் இருந்து அரசாங்கங்களால் பாராட்டப்பட்டு வந்தனர். ஆனால் 2009 இற்குப் பின்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தன. அந்த நடவடிக்கை இன்றுவரைக்கும் இடம்பெறுகின்றது.

முஸ்லிம்களின் மத கலாசாரத்தின் மீது கைவைத்தார்கள். அவர்களின் பொருளாதாரத்தின் மீது கைவைத்தார்கள். பல நெருக்கடிகளை கொடுத்து வந்தார்கள். கொரானோவில் மரணிப்பவர்களை அடக்கம் செய்யும் உரிமையையும் பறித்தார்கள்.

எனவே நாட்டில் இடம்பெற்ற 83 கலவரம் ஒரு சிறிய இனவாத குழுவாலே ஆரம்பிக்கப்பட்டதாகும். அதனைத் தடுக்கத் தவறியதாலே அது யுத்தம் வரைக்கு சென்றது. அதனால் அவ்வாறான இனவாதக் குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதா அல்லது நாட்டில் மீண்டும் இனவாதப் பிரச்சினை ஒன்றை ஏற்படுத்துவதா என்பதை அரசாங்கம் தீர்மானிக்கவேண்டும். – என்றார்.

## அரசாங்கத் தகவல் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நாயகம் நியமனம்



அரசாங்கத்தகவல் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர்நாயகமாக மொஹான் சமரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பதவியில் முன்னர் இருந்த நாலக்க களுவெள அண்மையில் பதவி விலகியிருந்த நிலையில், அந்த வெற்றிடத்துக்கு மொஹான் சமரநாயக்க நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர், இதற்கு முன்னதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராகக் கடமை புரிந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 80 லட்சம் ரூபா போதைப் பொருள்கள் வைத்திருந்த ஒருவர் கொழும்பில் கைது

80 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருளுடன் ஒருவர் கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் வைத்தே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 80 லட்சம் ரூபா பெறுமதியான 1.2 கிலோகிராம் ஐஸ் ரக போதைப்பொருளை கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். 62 வயதான நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கம் குறைகளை திருத்துவது அவசியம்

## திஸ்ஸ விதாரண வலியுறுத்து

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியை பலவீனப்படுத்துவது எமது நோக்கல்ல.

ஆளும் கட்சிக்கும், பங்காளி கட்சிக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். அரசாங்கத்தின் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகளை திருத்திக் கொள்வது அவசியமாகும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இரவுபெற்ற பங்காளி கட்சி தலைவர் கூட்டத்தில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொதுஜன பெரமுன தலைமையில் கூட்டணியை அமைத்துள்ள பங்காளிக் கட்சிகள் இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளன. இருப்பினும் பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்களின் கருத்துக்களும், செயற்பாடுகளும் பங்காளிக் கட்சிகளை புறக்கணிப்பதாக அமைகின்றன. அரசாங்கத்தை பலவீனப்படுத்துவது பங்காளி கட்சிகளின் நோக்கமல்ல, ஒரு சில வெறுக்கத்தக்க பேச்சுக்கள் கூட்டணியை பலவீனப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பாக கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களுக்கு பல முறை குறிப்பிட்டும் எவ்வித சாதகமான தீர்மானமும் கிடைக்கப் பெறவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் 12 அரசியல் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய பேச்சின் போது மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது. எல்லை நிர்ணய பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையில் நடத்த இடமளிக்க முடியாது.

சுபீட்சமாக எதிர்காலக் கொள்கைத் திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த வேண்டுமாயின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ஆளும் தரப்பின் ஒரு சிலரது வெறுக்கத்தக்க பேச்சுக்கள் கூட்டணியை பலவீனப்படுத்துகின்றன. முரண்பாடுகளை ஏற்படுத்தி கூட்டணியை பலவீனப்படுத்தி 2014 ஆம் ஆண்டு காணப்பட்ட அரசியல் சூழலை ஏற்படுத்துவது ஆளும் தரப்பின் ஒரு சிலரது நோக்கமாகக் காணப்படுகிறது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. குறைபாடுகளைத் திருத்திக்கொண்டு ஒன்றிணைந்து செயற்படுகின்றமை அவசியமாகும். கடந்த காலங்களில் இடம் பெற்ற ஒரு சில செயற்பாடுகள் அரசாங்கத்துக்குப் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஜெனிவா விவகாரத்தை அரசாங்கம் கையாண்ட விதம் முற்றிலும் தவறு என்பது பேச்சின் போது சுட்டிக்காட்டப்பட்டது. – என்றார்.





**லக்ஷ்மி நாராயணா திருமண சேவை**

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 197 1667
077 316 4796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி – 1993.09.06 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 45 செவ் – 01 இல்
தகைமை – B.A. (HONS) தொழில் – அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை Company Work மணமகள். 1987 பின்பு தேவை. (யாழில் வேலை)

பிறந்த திகதி – 1991.11.13 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தராடம் 4
கி.பா – 13 1/2 சூரி/செவ் – ...
தகைமை – IT Software Engineer
தொழில் – American Company
எதிர்பார்ப்பு – விஞ்ஞான பட்டதாரி Engineer மணமகள் தேவை.

பிறந்த திகதி –1991.04.16 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – பரணி 2
கி.பா – 22 செவ் – 2 இல்
தகைமை – M.B.B.S. தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor, Eng, விரிவுரையாளர் மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1983.07.15 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தரம் 2
கி.பா – 06 சூரி/ செவ் – 10 இல்
தகைமை – Civil Engineer தொழில் – அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகள் விரும்பத்தக்கது.

பிறந்த திகதி – 1991.07.13 மதம் – இந்து
ஜாதி – R.C நட்சத்திரம் – ஆயிலியம்
கி.பா –50 செவ் – 07 இல்
தகைமை – பட்டதாரி தொழில் – அமெரிக்கா எம்பசி
எதிர்பார்ப்பு – கொழும்பில் வேலை, கொழும்பு மணமகள்.

பிறந்த திகதி – 1985.06.10 மதம் – இந்து R.C
ஜாதி – V + குருகுலம் நட்சத்திரம் – சதயம்
கி.பா – 42 செவ் – 03 இல்
தகைமை – OL தொழில் – விவசாயம்
எதிர்பார்ப்பு – சாதாரண படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1976.06.07 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அத்தம் 1
கி.பா – 61 செவ் – 08 இல்
தகைமை – B.sc
தொழில் – Development Officer
எதிர்பார்ப்பு – AL மேல் படித்த அரச சேவை மணமகள் யாழ் வேலை உள்ளவர்கள் (ரேவதி, உத்தரட்டாதி, அனுசம், விசாகம், மிருகசீரிடம்)

பிறந்த திகதி – 1991.03.18 மதம் – இந்து
ஜாதி – விஸ்வகுலம் நட்சத்திரம் – அச்சுவினி
கி.பா – 16 செவ் – 08 இல்
தகைமை – B.sc Civil Eng தொழில் – சிங்கப்பூர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகள்.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி – 1983.10.24 மதம் – இந்து
ஜாதி – குருகுலம் நட்சத்திரம் – கார்த்திகை 2
கி.பா – 63 செவ் – 07 இல்
தகைமை – IT தொழில் – அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1989.09.30 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – அத்தம்
கி.பா – 24 சூரி/செவ் – 2 இல்
தகைமை – AL தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – UK யில் PR உள்ள Student Visa PR, இல்லாதவர் தொடர்பு கொள்ளலாம்.

பிறந்த திகதி – 1991.06.18 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூரம்
கி.பா – 75 செவ் – 8 இல்
தகைமை – IT Software Engineer
தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – அரச சேவை Colombo வேலை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1993.04.20 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – ரேவதி
கி.பா – 39 செவ்/சூரி – 08 இல்
தகைமை – AL (Cima Colombo)
தொழில் – Bank Accountant Colombo
எதிர்பார்ப்பு – அரச சேவை பட்டதாரி Colombo விருப்பம். சிங்கப்பூரில் வேலை விருப்பம்.

பிறந்த திகதி – 1993.08.02 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – திருகோணம்
கி.பா – 88 செவ் – 08 இல்
தகைமை – Software Engineer தொழில் – Singapor Work
எதிர்பார்ப்பு – சிங்கப்பூர், இலங்கை பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1994.04.03 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூராடம் 1
கி.பா – 12 செவ் – 03 இல்
தகைமை – B.sc Software Engineer
தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – பட்டதாரி, அரச சேவை சிங்கப்பூர் மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1991.09.19 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – உத்தராடம் 4
கி.பா – 11 செவ்/சூரி – 11 இல்
தகைமை – B.com தொழில் – D.O அரச சேவை
எதிர்பார்ப்பு – பட்டதாரி, அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1995.03.26 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – திருகோணம்
கி.பா – 38 செவ்– 11 இல்
தகைமை – Computer Science தொழில் – Company
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகன் தேவை.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# புத்தாண்டுடன் எமது கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் கோரிக்கை

## நேற்று கிழக்கில் ஊடகவியலாளர் சந்திப்பு

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும்,போரினாலும் ஏனைய காரணங்களினாலும் மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்ட மாற்றுவலுவுடன் செயற்படுவோர் நேற்றுக் காலை கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் தமக்கான மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை செயற்படுத்தும் முகமாக ஊடகவியலாளர்களை சந்தித்துள்ளனர் .

இலங்கையில் வாழும் மாற்றுத்திறனாளிகள் அனைவரின் சார்பாகவும் மாற்றுத்திறனாளிகள் காப்பகம் மாவட்டம் தோறும் அமைக்கப்பட வேண்டும், மாதம் தோறும் பெரிதும் பாதிக்கப்பட்டோருக்கு ரூபா 10,000 நிதியுதவி வழங்கப்படவேண்டும், பாதிக்கப்பட்டோர் அமைப்புக்களுக்கு அவை தொடராக இயங்குவதற்கான உதவிகள் வழங்கப்படவேண்டும் என்கின்ற மூன்று கோரிக்கைகளை பாதிக்கப்பட்டோர் சார்பாக மலரும் புத்தாண்டில்,இந்த ஆண்டில் நிறைவேற்றித் தருமாறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர் .

அத்தோடு போரின் பின்னரான காலத்தில் பாதிக்கப்பட்டோர் குறித்தான கொள்கை உருவாக்கத்தையும் கோருகின்றனர்.

இதுதொடர்பாக அவர்கள் இன்று முன்வைத்த கோரிக்கை அறிக்கை வருமாறு:-

போர் ஓய்ந்து 12 வருடங்களை கடக்கின்றோம். போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மற்றைய மாகாணங்களிலும் பார்க்க அதிகம்.

பாதிக்கப்பட்டோரின் வாழ்வில் அவர்களின் வலியை ஆற்றுவதற்கும், அவர்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்துவதற்கும் இலங்கை அரசும், மாகாண அரசுகளும், தொண்டு நிறுவனங்களும், உறவுகளும் ஆற்றி வரும் சேவைகளை நாம் நன்றியோடு நினைவு கூறுகின்றோம்.

இருந்த போதும் எமது தேவைகளில் பல இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளது என்பதை நாம் எமது உறவுகளின் முன் சொல்ல வேண்டியுள்ளதால் இன்று இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம்.

மாவட்டம் தோறும் மாற்றுத்திறனாளிகள் காப்பகம்.

மாற்றுத்திறனாளிகள் தங்குவதற்கான வசதிகளுடன் கூடிய காப்பகங்கள் மாவட்டம் தோறும் அமைக்கப்பட வேண்டும் என்பது எமது நீண்டகால தேவையாக உள்ளது. இன்னொருவரில் முழுமையாக தங்கி வாழ்பவர்கள் பல சந்தர்ப்பங்களில் தமக்கான ஒரு காப்பகங்கள் இல்லை என்று ஏங்குகின்றார்கள். அவ்வாறான காப்பகங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க வேண்டும் என கோருகின்றோம்.



மாதம் தோறும் பெரிதும் பாதிக்கப்பட்டோருக்கு ரூபா10,000 நிதியுதவி

இன்னொருவரில் பெரிதும் தங்கி வாழ்பவர்களுக்கு குறைந்த பட்சம் ரூபா 10,000 மாதாந்த உதவித் தொகையாக கொடுக்கப்பட வேண்டுமென்று கோருகின்றோம்.

உதாரணமாக, முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள், இரண்டு கரங்களையும் இழந்தவர்கள், பல அங்கங்களை இழந்தவர்கள், இரண்டுகண்களையும் இழந்தவர்கள், இரண்டு கால்களையும் முற்றாக இழந்தவர்கள், முதுமையில் அநாதைகள் ஆக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டோர் அமைப்புக்களுக்கு இயங்குவதற்கான உதவிகள். கிராமங்களை மையப்படுத்தி இயங்கி வரும் பாதிக்கப்பட்டோர் அமைப்புகளுக்கு, அவை தொடர்ச்சியாக இயங்குவதற்கு பல்வேறு உதவிகளைவழங்கவேண்டும்எனவும்கோருகின்றோம் என DATA தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பினர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

# கருத்துக்களை சுதந்திரமாகவும், பயமின்றியும் பதிவிடும் முழு அதிகாரமும் எனக்கு உண்டு

## சாணக்கியன் வலியுறுத்தல்

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

எனது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் வகையில் கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நான் ஆற்றிய உரைக்கும் என்னுடைய கருத்துக்கும் எதிராக என்னை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்து விசாரிக்க வேண்டும் என சபையில் வலுயுறுத்திய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் கூற்றுக்கு எதிராக தக்க கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் புரிந்துகொள்ளவேண்டும். இவரின் இந்தக் கருத்து சபையில் உள்ளவர்களுக்கும் ஓர் அச்சுறுத்தலான விடயமாகும். சபையில் எனது கருத்துக்களை சுதந்திரமாகவும், பயமின்றியும் பதிவிடுவதற்கான முழு அதிகாரமும் எனக்கு உண்டு.

அரசாங்கம் தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள 2021 ஆம் ஆண்டளவில் இன்னொரு தாக்குதலுக்கும் திட்டமிட்டால் கூட சந்தேகப்படுவதற்கில்லை.

ஏனெனில், இவர்கள்தான் கடந்த காலங்களில் சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கியவர்கள். அவரைப் போன்ற ஒருவர் மீண்டும் இந்த அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கலாம். இதுதொடர்பாக நாட்டு மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்.' என அன்றைய தினம் தெரிவித்திருந்தேன்.

இந்த கருத்துக்கு எதிராக அவர் என்னைக் கைது செய்து விசாரிக்க வேண்டும்எனகூறியிருக்கின்றமை எனது சிறப்புரிமையை மீறும் செயல்பாடாகக் காணப்படுகின்றது.

எமது கட்சி புதிய கட்சி இல்லை. 1948 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டதாகும். எமக்கு எல்லா உரிமையும் உண்டு. இந்த ஜனநாயக நாட்டில் இவ்வாறான ஒழுக்க விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்பட வேண்டும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உரப்பையில் சுற்றிய நிலையில் கட்டிலின் கீழ் மனைவியின் சடலம்

## புத்தளத்தில் கொடூரம்; கைதானார் கணவன்

கணவன் பொல்லால் தாக்கியதில் மனைவி உயிரிழந்த சம்பவமொன்று புத்தளத்தில் பதிவாகியுள்ளது.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லிபுரம் பகுதியில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிபொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லிபுரம் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து நேற்று சனிக்கிழமை பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அதற்கமைய வெட்டாலை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட முரண்பாட்டில் கோபமடைந்த கணவன் மனைவியை பொல் லால் தாக்கி கொலை செய்துள்ளதாக விசாரணைகளின்போதுதெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அவரது மனைவியின் சடலத்தை உரைப்பையில் மூடி கட்டிலின் கீழ் மறைத்து வைத்துள்ளதுடன், அன்றைய தினம் இரவு சடலத்தை வேறு பிரதேசத்துக்கு எடுத்துச் சென்று மறைத்து வைக்கவும் திட்டமிட்டிருந்துள்ளார். எனினும் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றமையை அடுத்து கட்டிலின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

35 வயதுடைய குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்து புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

- - - - - - - - - - - - - - - -

**பங்காளிகளின்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையிலேயே 2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir


இலங்கையில் இப்போது மிகவும் பிரபலமான குளிர்பானத்தில் ஒன்றாக திகழும்

U-Fresh

U - FRESH

வடமாகாணத்தில் மிகவும் பிரபலமாக விளங்குகிறது.

இது 8 விதமான சுவைகளில் உங்களுக்காக கிடைக்கிறது.
**APPLE, ORANGE, PEAR, PINEAPPLE, MANGO, STRAWBERRY, LEMON, GINGER.**

இது 200ml மற்றும் 500ml பொதிகளில் உங்களுக்காக கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மற்றும் இந்த சுவை களில் இஞ்சி சுவை (GINGER) COVID - 19 தொற்றாளர்கள், வயோதிபர்கள் மற்றும் அனைவருக்கும் மிகவும் உகந்த பானமாகும்.

இது நடுநிலை சீனி என்பதால் எந்த வித வயதெல்லையினரும் பருகலாம். அத்தோடு இதை நன்றாக குளிரூட்டியில் வைத்து பருகுவதன் மூலம் உண்மையான சுவையை உணரலாம்.

இப்போது உங்களுக்கான இரண்டு போட்டி.

இப்போது இந்த குளிர்பானத்தை வடமாகாணத்தில் Rathee Event Management நிறுவனம் உத்தியோகபூர்வமாக விநியோகம் செய்கிறது.
எமது இந்த குளிர்பானத்தை நீங்கள் உங்கள் கடைகளுக்கு அல்லது, வீட்டில் நடக்கும் வைபவங்களுக்கு பெற்றுக்கொள்ளலாம்.
உங்களுக்கான விசேட விலைக்கழிவும் வழங்கப்படும்.

**போட்டி 01:-** நீங்கள் வடக்கில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார்,வவுனியா, முல்லைத்தீவு) ஆகிய இடங்களில் இருப்பவராயின் உங்கள் அயலில் உள்ள கடைகளில் எமது U-FRESH இருக்கிறதா என்று பாருங்கள், இல்லை என்றால் அந்த குறிப்பிட்ட 5 கடைகளின் பெயர், விலாசம் என்பவற்றை SMS அல்லது WhatsApp மூலம் 0774737737 எனும் இலக்கத்துக்கு அனுப்பிவைக்கும், உங்களுக்கு எமது U-FRESH நிறுவனத்தின் சிறப்பு பரிசு வழங்கப்படும்.

**போட்டி 2:-** எமது U - FRESH குளிர்பானத்துடன் நீங்கள் ஒரு SELFIE எடுத்து அதை எமது WhatsApp இலக்கத்துக்கு அனுப்பிவைக்கும் உங்களுக்கு ஒரு சிறப்பு பரிசு வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு எமது சந்தைப்படுத்தல் பிரிவை தொடர்பு கொள்ளவும்.

**0774737737, 0773247737, 0773257747**


# காத்தான்குடியில் கைதான திருடர்களின் மோட்டார் சைக்கிளில் கைக்குண்டு மீட்பு



மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட திருடர்களின் மோட்டர் சைக்கிளில் இருந்து கைக்குண்டு ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை மாலை மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக் காலமாக தாளங்குடா, பூநொச்சிமுனை போன்ற பிரதேசங்களில் வீதிகளால் தனிமையில் செல்லும் பெண்களைத் திருடர்கள் இலக்குவைத்து மோட்டார்சைக்கிளில் அவர்களைப் பின் தொடர்ந்து அவர்களின் கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடிவருகின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை தனிமையில் வீதியால் சென்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற திருடர்கள் அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் காத்தான்குடி பூநொச்சிமுனை பகுதியைச் சேர்ந்த 20, 19 வயதுடைய இருவரை கைது செய்தமையுடன் அறுக்கப்பட்ட 2 பவுண் தங்கச் சங்கிலி ஒன்றையும் திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள் ஒன்றையும் மீட்டனர். இதில் கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டர் சைக்கிளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளதாகவும் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org